வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 03 13.07.2022 புதன்கிழமை இதழ் : 219 பக்கங்கள் : 16

# கோட்டா வீசா கோரிக்கை; நிராகரித்தது அமெரிக்கா!



சென்னை, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'வீசா' கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

மக்களின் கடும் எதிர்ப்பு மற்றும் ஜனாதிபதி மாளிகை முற்றுகை போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று புதன்கிழமை பதவியிலிருந்து விலகுகிறார். அவர், இன்றைய திகதியிட்ட இராஜினாமா கடிதத்தில் நேற்று ஒப்பமிட்டார். 15



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய இரதோற்சவம் நேற்று இடம்பெற்றவேளை...!

(மேலும் படங்கள் பக்கம் 16இல்)

## ஜனாதிபதியுடன் பிரதமரும் பதவி விலக வேண்டும்!

### போராட்டக் குழு நிபந்தனை

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகும்போது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தனது பதவியிலிருந்து விலக வேண்டும் என்று போராட்டக் குழு நிபந்தனை விதித்துள்ளது.

காலிமுகத்திடல் போராட்டக்கள பிரதிநிதிகளுக்கும் சகல அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்க உறுப்பினர்களுக்கும் இடையில் நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

இந்த சந்திப்பில், போராட்டக்காரர்களால் போராட்டத்தின் செயல்பாட்டு திட்டம் முன்வைக்கப்பட்டது. இதில், பல கோரிக்கைகளும் நிபந்தனைகளும் முன்வைக்கப்பட்டன.

இதன்படி, உடனடியாக இடைக்கால அரசாங்கம் ஒன்றை நியமித்து, மக்களின் அடிப்படை பிரச் 15

## 13ஆம் திருத்த சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

### பிரதமரிடம் டக்ளஸ் கோரிக்கை

கொழும்பு, ஜூலை 13

நாட்டை வழிநடத்தும் வதற்கான சந்தர்ப்பம் உருவாகும்பட்சத்தில் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை கவனத்தில் கொண்டு, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கோரியுள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலவரம், பொருளாதார நெருக்கடி தொடர்பில் பிரதமரை அமைச்சர் டக்ளஸ் நேற்று சந்தித்துப் பேசினார். இதன்போதே அவர் இந்தக் 15

## கோட்டாபய விலகுவது தாமதமாகக்கூடும்?

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று பதவி விலகுவார் என்று அறிவிக்கப்பட்டபோதிலும் அவரின் பதவி விலகல் தாமதமாகலாம் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியும் அவரின் நெருங்கிய உறவினர் 15

## விமான நிலையத்தில் நேற்று கோட்டாவும் தடுக்கப்பட்டார்!

### வெளிநாட்டு செய்திச் சேவை தகவல்

கொழும்பு, ஜூலை. 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக, நாட்டை விட்டு வெளியேற முயற்சித்தபோதிலும், இலங்கையின் குடிவரவு-குடியகல்வுப் பணியாளர்கள் அதனை தடுத்ததாக உத்தியோகபூர்வ தரப்புக்களை மேற்கோள்காட்டி ஏ.எப்.பி செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

இதனையடுத்து கோட்டாபய ராஜபக்ஷ 15

## ஸ்டாலினுக்கு கொரோனா!

சென்னை, ஜூலை 13

தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார்.

"உடல்சோர்வு சற்று இருந்தது. பரிசோதித்ததில் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து தனிமைப்படுத்திக் 15

## நாட்டை விட்டு தப்பிச் செல்ல பஸில் எடுத்த முயற்சி தோல்வி!

### விமான நிலையத்தில் திருப்பி அனுப்பப்பட்டார்

கொழும்பு, ஜூலை. 13

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நாட்டில் இருந்து வெளியேற முயற்சித்தபோதும், அது பயனளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை அவர், வெளிநாடு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்குச் சென்றபோது, அவரின் ஆவணங்களை பரீட்சிப்பதற்கு குடிவரவுத்துறை அதிகாரிகள் மறுத்துள்ளனர்.

இதனையடுத்து, அங்கு பதற்ற 15

## பாண் விலை உயர்ந்தது!

கொழும்பு, ஜூலை. 13

450 கிராம் பாணின் விலை 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் ஏனைய பேக்கரி 15

## சுமுகமான அதிகார மாற்றம் இலங்கையில் ஏற்படவேண்டும்!

### ஐ.நா. பொதுச் செயலாளர் வலியுறுத்து



நியூயோர்க், ஜூலை. 13

இலங்கை அரசாங்கத்தின் சுமுகமான அதிகார மாற்றத்தை உறுதி செய்வதற்கும், நாட்டின் ஆழமான பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கும் பேச்சு நடத்தவேண்டும் என்று ஐக்கிய நாடுகளின் பொதுச்செயலாளர் கோரியுள்ளார். 15

**பத்திரிகை விநியோகிக்க ஆட்கள் தேவை!**

ஈழநாடு நாளிதழ்களை யாழ்ப்பாணம் நகரிலிருந்து சைக்கிள் மூலம் கொண்டு சென்று விநியோகிப்பதற்கு ஆட்கள் தேவை.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் - சங்கானை - காரைநகர்.

சம்பளம்: நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்

தொடர்புகளுக்கு:-

077 311 9298, 075 313 2805

## இப்படியும் நடக்கிறது...!

இன்று பதின்மூன்றாம் திகதி. கோட்டாபய ராஜபக்ஷ பதவிலிருந்து விலகுவதற்காக குறித்துக் கொடுத்திருக்கும் நாள் இன்றைய நாள்.

இதனிடையே அடுத்த ஜனதிபதி யார்? பிரதமர் யார் என்ற சர்ச்சைக்கு, இந்தப் பத்தியை எழுதிக்கொண்டிருக்கும் வரை தீர்வு கிடைத்ததாக தெரியவில்லை.

சஜித் பிரேமதாஸ, தான்தான் ஜனாதிபதி என்று கடந்த தேர்தலில் அடைய முடியாததை, போராட்டக்காரர்களின் தியாகத்தால் பெற்றுவிட முடிவெடுத்து விட்டார். ஆகக்குறைந்தது அடுத்த இரண்டு ஆண்டுகளும் ஜனாதிபதியாக இருந்துவிட்டுப் போகவேண்டும் என்ற அவரது நினைப்பை யாரும் தவறானது என்று சொல்லிவிட முடியாதுதான்.

இதனிடையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை பிரதமராக நியமிக்கவேண்டும் என்று யாரோ ஒருவர் குரல்கொடுக்க, அதுதொடர்பான அறிக்கைகளும் செய்திகளும் வலம் வருகின்றன.

இலங்கையின் பிரதமராக முன்னரும் ஒரு தமிழரை நியமிக்க தென்னிலங்கை அரசியல் தயாராகி இருந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

லக்ஷ்மன் கதிர்காமர் என்ற ஒரு தமிழரை சிங்கள மக்கள் தமது பிரதமராகப் பார்க்க நினைத்தது இந்த நேரத்தில் நினைவுக்கு வந்து செல்வதையும் தவிர்க்க முடியவில்லை.

சுமந்திரனை இலங்கையின் காவலனாக தெற்கு பார்க்கத் தொடங்கியிருப்பது இந்த ஊர்க்குருவிக்கு ஆச்சரியமானதல்ல. அவர் அதற்குத் தகுதியானவர்தான்.

அது அல்ல இங்கு சொல்ல வருவது,

சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை நியமிப்பது தொடர்பாக அனைத்துக் கட்சிகளும் கடந்த மூன்று தினங்களாகக்கூடிக் கதைத்து வருகின்றன. நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தில், சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி பதவிக்கான தமது தெரிவாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவு செய்திருப்பது குறித்து அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட கட்சியின் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தபோது அதனை நிராகரித்தவர்களில் முக்கியமானவர் நமது சுமந்திரன்.

அவரின் கருத்து நியாயமானதுதான். கோட்டாபய தனது பதவியை துறந்து இப்படியொரு வெற்றிடத்தை ஏற்படுத்துவார் என்று யாரும் நினைத்திருப்பார்களோ தெரியவில்லை. அதிகம் ஏன் சஜித் கூட நினைத்திருக்கமாட்டார். அதனால்தான் அவர் நிறைவேற்று ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்கவேண்டும் என்று தொடர்ந்து குரல்கொடுத்து வந்தார்.

அவரின் அந்தக் கோரிக்கையுடன் உடன்பட்டவராக சுமந்திரனும் அவருடன் அந்த விடயத்தில் ஒன்றாகவே பயணித்தார் என்றே சொல்ல வேண்டும்.

இப்போது அந்தப் பதவியில் அமர முடிகின்றது என்றதும் அதில் தான்தான் அமரவேண்டும் என்று அவர் நினைப்பதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் சுமந்திரன் இல்லை. அதுவும் நியாயமானதுதான்.

இப்போது தெற்கில் பதவிக்கான யுத்தம் ஆரம்பமாகியிருக்கின்றது. அந்தப் பதவி பிடி போட்டியில் முன்னிலையில் இருக்கின்ற எவரிடமும் இந்த நெருக்கடியிலிருந்து நாட்டை எப்படித் தூக்கி நிமிர்த்துவது என்பதில் தெளிவான கொள்கையோ அல்லது திட்டமோ இருப்பதாக இதுவரை அவர்கள் தெரிவிக்கவில்லை.

யார் ஆட்சிக்கு வந்தாலும், சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் உதவும் நாடுகளும் உதவி செய்தால் மாத்திரமே நாடு இன்றிருக்கும் நிலையிலிருந்து மூச்சு விடவாவது முடியும். ஆகக்குறைந்தது அவர்களால் முடியும் என்று ஆட்சிக்கு வருகின்றவர்கள்மீது மேற்குலகமும் உதவும் சக்திகளும் நம்பிக்கை கொள்ளக்கூடிய ஒருவரே பதவிக்கு வரவேண்டும். அப்படியொருவர் வந்தால் மட்டுமே உதவிகள் கிடைக்கும்.!

இப்போது இந்த நெருக்கடிக்கு தீர்வுகாணும் முயற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அனைத்துக் கட்சிகளும் தத்தமது விருப்பங்களை முன்வைத்து வருகின்ற இந்த வேளையில், இந்த பொருளாதார நெருக்கடிக்கு நாட்டில் புரையோடிப்போன இனப்பிரச்னைக்கு தீர்வுகாணாதது தான் முக்கிய காரணம் என்று கூறிக்கொண்டிருக்கும் தமிழ் தரப்புக்கள், இந்த வேளையில் தாம் எத்தகைய கோரிக்கையை முன்வைக்க வேண்டும் என்பதிலாவது ஒருமித்து முடிவெடுக்கிறார்களா என்றால் அதற்காக எந்த சமிக்ஞையையும் காணவில்லை.

பாராளுமன்றத்தில் அங்கம்வகிக்கும் பதின்மூன்று எம்.பிக்களையும் முதலில் ஒன்றாகக்கூடவைத்து ஒரு பொது உடன்பாட்டுக்கு வரச் செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் சில முக்கிய பிரமுகர்கள் முயன்று கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. அவர்களின் முயற்சி எப்படி முடிகின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.!

- ஊர்க்குருவி

# மஹிந்த, பஸில் வெளிநாடு செல்ல தடையா? நாளை விசாரணைக்கு வருகின்றது வழக்கு

கொழும்பு, ஜூலை 13

முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்களான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் டபிள்யூ.டி. லக்ஷ்மன் ஆகியோருக்கு உயர் நீதிமன்றின் அனுமதியின்றி நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை எதிர்வரும் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு மனுதாரர்கள் நேற்று சட்டத்தரணி ஊடாக கோரிக்கை விடுத்தனர். சட்டத்தரணி உபேந்ர குணசேகரவின் ஊடாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த காரணங்கள் தொடர்பில் தற்போது அவசரமான நிலை காணப்படுவதால், எதிர்வரும் 14ஆம் திகதி இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறும் மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

இந்த மனுவை கடந்த 6ஆம் திகதி ஆராய்ந்த நீதிமன்றம், ஜூலை 27ஆம் திகதி குறித்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கு தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. எவ்வாறாயினும், இந்த வேளையில் இந்த தரப்பினர் நாட்டை விட்டு தப்பிச் சென்றால் அது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன்படி, இந்த மனுவை பரிசீலித்த நீதிமன்றம், இந்த மனுவை எதிர்வரும் 14ஆம் திகதி விசாரணைக்கு எடுத் துக்கொள்ள தீர்மானித்துள்ளது. (அ)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முயன்ற 55 பேர் நேற்று அனர்த்தத்தில் இருந்து மீட்பு!

கொழும்பு, ஜூலை 13

சட்டவிரோதமான முறையில் நாட்டை விட்டு தப்பிச் சென்ற குழுவினரை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று ஆழ்கடலில் தத்தளித்த நிலையில் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

55 பேர் அந்தக் கப்பலில் இருந்ததாகவும் குறித்த கப்பல் நேற்று காலை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

குறித்த கப்பல் விபத்துக்குள்ளானதாக கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களம் கடற்படையினருக்கு அறிவித்ததையடுத்து, கடற்படையின் பராக்கிரமபாகு கப்பல் அந்த இடத்தை சென்றடைந்தது.

அந்த நேரத்தில் நாட்டின் தென்கிழக்கே 722 கிலோமீற்றர் தொலைவில் குறித்த கப்பல் சூறாவளியால் தாக்கப்பட்டு நீர் கசிவு காரணமாக மூழ்கும் அபாயத்தில் இருந்ததாகவும் உணவு மற்றும் தண்ணீர் இல்லாததால் பலர் ஆபத்தான நிலையில் இருந்ததாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட குழுவில் மூன்று பெண்கள் ஆறு குழந்தைகள் மற்றும் இந்த சட்டவிரோத பயணத்தை வழிநடத்திய ஐந்து பேர் அடங்குவதாக கடற்படை குறிப்பிட்டுள்ளது. (அ)

# கட்சிகளால் செய்யமுடியாத ஒன்றை நாட்டு மக்கள் செய்து காட்டியுள்ளனர்

கொழும்பு, ஜூலை 13

எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளால் செய்ய முடியாத ஒன்றை இந்த நாட்டு மக்கள் செய்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷகளை விரட்டியடிக்கப் போராட்டக் களத்தில் இருந்த மக்கள் பெரும் பணி செய்ததாகவும் அவர் கூறினார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் இருந்து விலகுவதே மக்களை வாயடைக்கச் செய்வதற்கான சிறந்த வழியாகும் எனவும் குறிப்பிட்டார். (அ)

# வைத்தியசாலைகளின் செயல்பாடுகள் எரிபொருள் பற்றாக்குறையால் பாதிப்பு

கொழும்பு, ஜூலை 13

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மருத்துவமனைகளுக்குச் செல்வதில் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் கடும் சிக்கலை எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில், மருத்துவ ஊழியர்களுக்கான எரிபொருளை பெற்றுக்கொள்வது தொடர்பில் இலங்கை பெற் றோலியக் கூட்டுத்தாபனத்துடன் கலந்துரையாடி வருவதாக சுகாதார அமைச்சின் செய லாளர் ஜனக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

கொழும்புக்கு வெளியே வசிக்கும் சுகாதார ஊழியர்கள் நகரத்துக்கு செல்வதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக சுட்டிக்காட்டிய அவர், சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருளை வழங்கும்போது பாதுகாப்பு பிரச்னைகள் காணப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## ஷின்சோ அபேவுக்கு அஞ்சலி செலுத்த ஜப்பான் தூதரகம் சென்றார் தினேஷ்!

கொழும்பு, ஜூலை 13

பாராளுமன்ற சபைத் தலைவரும், பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன ஜப்பான் தூதரகத்துக்குச் சென்று ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் ஹிடேகி மிசுகோஷியும் கலந்துகொண்டார்.

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் மறைவுக்காக நேற்று தேசிய துக்க தினமாக பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு பிரகடனப்படுத்தியுள்ளது.

ஜப்பான் நாட்டின் முன்னாள் பிரதமர் கடந்த 8ஆம் திகதி ஜப்பானின் நாரா நகரில் உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சமுர்த்தி உத்தியோகத்தர்கள் 2ஆம் நாளாகவும்புறக்கணிப்பு

மட்டக்களப்பு, ஜூலை 13

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி ஆகிய செயலகத்திற்குட்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இரண்டாவது நாளாகவும் நேற்று செவ்வாய்க்கிழமை பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

எரிபொருள் வழங்கப்படாமையால் கடமைகளை மேற்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்கொள்வதாகவும், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு எரிபொருளை வழங்குமாறு கோரியும், அத்தோடு அத்தியாவசிய சேவை உத்தியோகத்தர்களுக்குள் சமுர்த்தி உத்தியோகத்தர்களையும் உள்வாங்குமாறு கோரியும் அவர்கள் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

ஈழநாடு
Eelanadu
12.07.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், ஆனி 28

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# கூட்டமைப்பு என்ன செய்யவேண்டும்?

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன. இதில் கூட்டமைப்பு பங்குபற்றலாமா அல்லது இல்லையா என்னும் கேள்விகளும் எழுகின்றன? எழுத்து மூல உடன்பாட்டின் அடிப்படையில்தான் கூட்டமைப்பு பங்குபற்ற வேண்டுமென்று சிலர் வாதங்களை முன்வைக்கின்றனர். உண்மையில் கூட்டமைப்பு எவ்வாறான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்?

எழுத்துமூல உடன்பாட்டின் அடிப்படையில் சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்குகொள்ளலாமா? ஒரு சர்வ கட்சி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும்போது, எந்தக் கட்சியோடு உடன்பாடு செய்வது? அனைத்துக் கட்சிகளுடனுமா? எனவே எழுத்து மூல உடன்பாட்டின் அடிப்படையில் சர்வ கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பது என்னும் வாதம் அர்த்தமற்ற ஒன்றாகும். கூட்டமைப்பு சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்குகொள்ள வேண்டுமாயின் ஏனைய கட்சிகள் போன்று சாதாரணமாகத்தான் பங்குகொள்ள முடியும். எனவே, இந்த விடயத்தை தமிழ் மக்கள் எவ்வாறு புரிந்துகொள்ள வேண்டும்?

நாடு ஒரு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றது. பொருளாதார நெருக்கடியென்பது தமிழ் மக்களுக்குமானதுதான். இந்தப் பின்புலத்தில் நோக்கினால், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளில் கூட்டமைப்பு அதிகம் தள்ளியிருக்க முடியாது. ஏனெனில், கூட்டமைப்பு அவ்வாறு தள்ளியிருந்தாலும்கூட, பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு, இந்தியா உட்பட ஏனைய பல நாடுகளும் உதவி செய்யத்தான் போகின்றன. இந்த நிலையில் கூட்டமைப்பு அதில் எந்தவோர் எதிர்மறையான தலையீடுகளையும் செய்ய முடியாது. அவ்வாறு எதிர்மறையான கருத்துக்களை முன்வைத்தால் அது கூட்டமைப்பையே பாதிக்கும். இந்த நிலையில் கூட்டமைப்பு என்ன செய்யலாம்?

பொருளாதார நெருக்கடி தற்போது மிகவும் பலவீனமான அரசியல் சூழலை உருவாக்கியிருக்கின்றது. ஒரு புறம் பொருளாதார நெருக்கடி மறுபுறம், ஸ்திமரற்ற அரசாங்கம். இந்த நிலையில், ஒரு ஸ்திரமான அரசாங்கம் என்பதே நாட்டின் தேவையாகும். இந்தப் பின்புலத்தில் சிந்தித்தால், சர்வ கட்சி அரசாங்கமொன்றை அமைப்பதை தவிர வேறு தெரிவுகள் இல்லையென்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இதன் மூலம் ஓரளவு பிரச்னைகளை சமாளிக்க முடியும் அதேவேளை, உதவி வழங்கக் கூடிய நாடுகளையும் திருப்திப்படுத்த முடியும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பொறுத்தவரையில், சர்வ கட்சி அரசாங்கத்தில் பங்குகொள்ளக் கூடாது, அதே வேளை, அதனை எதிர்க்கவும் கூடாது. ஏனெனில், இலங்கையின் நிலைமை தற்போது மனிதநேய விவகாரமாக, ஐக்கிய நாடுகள் சபையால் நோக்கப்படும் சூழலில், தமிழ் மக்களின் தலைமையான கூட்டமைப்பு, பொறுப்பற்ற வகையில் செயற்பட முடியாது. அதேவேளை தற்காலிக அரசாங்கம் ஒன்றில் அங்கம் வகித்து, தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைளை பலவீனப்படுத்தவும் முடியாது. இந்த இரண்டு விடயங்களையும் ஒரே நேரத்தில் கையாள வேண்டுமாயின், சர்வ கட்சி அரசாங்கத்தின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தும், முயற்சிகளுக்கு வெளியிலிருந்து ஆதரிவளிப்பது ஒன்றுதான் கூட்டமைப்பின் முன்னாலுள்ள ஒரேயொரு தெரிவாகும்.

அதேவேளை, மறுபுறத்தில் தமிழ் மக்களின் அரசியலை பலப்படுத்தும் வகையில், தமிழ்த தேசிய கட்சிகள் செயற்பட வேண்டும். தமிழ் மக்களின் பொருளாதார நிலைமையை தூக்கி நிறுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் தொடார்பில் ஒரு பொது வேலைத்திட்டம் தொடர்பில் சிந்திக்க வேண்டும் ஏனெனில், இந்த நிலைமை மாறியவுடன் மீளவும் தமிழ் மக்களின் பிரச்னைகளை தனியாக உரையாட வேண்டிய சூழலே ஏற்படும்.

தற்போது இடம்பெற்றுவரும் போராட்டம் ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கம் கொண்டதாக இருப்பினும்கூட, சிங்கள ஆட்சியாளர்களின் கடந்த கால தவறுகளை ஆராய்ந்து, சிறந்த எதிர்காலமொன்றை உருவாக்கிக் கொள்வதற்கான போராட்டம் அல்ல. தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டக் கூடிய விடயங்கள் போராட்டக்காரர்களால் இதுவரையில் முன்வைக்கப் படவில்லை. எனவே, கூட்டமைப்பு எடுக்கும் எந்தவொரு முடிவும் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைளை பலவீனப்படுத்துவதற்கு பயன்பட்டுவிடக் கூடாது. அதற்காக வறட்டுத்தனமான முடிவுகளுடனும் காலத்தை விரயம் செய்யக்கூடாது.

# ரணில் இல்லத்தின் நூலகம்!

**- அலசுவது இராஜதந்திரி -**



இலங்கையின் அரசியல் வரலாற்றோடு மட்டுமல்ல. ஊடகத் துறை குறிப்பாக, பத்திரிகைத்துறை வரலாற்றோடு பெரிதும் சம்பந்தப் பட்டதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வாழ்க்கையாகும்.

ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்தை ஸ்தாபித்ததோடு இலங்கையின் பத்திரிகை துறையின் பிதாமகர் என்று குறிப்பிடுமள வுக்கு விளங்கியவரே காலஞ்சென்ற டி. ஆர். விஜயவர்த்தன. அவரின் நெருங்கிய உறவின ரும் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியுமான ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் உறவினரே ரணில் விக்கிர மசிங்க. அத்துடன், ரணில் விக்கிரமசிங்க இலங்கையின் பிரபல இராஜதந்திரியாக இருந்த காலஞ்சென்ற எஸ்மன்ட் விக்கிரம சிங்கவின் புதல்வராவார்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் தமது சொந்த விமானத்தில் சிங்கப்பூரிலிருந்து பயணித்த போது மாயமான முறையில் காணாமல்போன உபாலி விஜயவர்த்தனவும் ரணில் விக்கிரமசிங்கவின் நெருங்கிய உறவினர். இவர்கள் அனைவருமே கொழும்பு றோயல் கல்லூரியில் கல்வி பயின்றதோடு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த களனி ரஜமகா விகாரையின் பரிபாலகர்களாகவும் இருந்து வருகின்றனர். 1978ஆம் ஆண்டு ஜே. ஆர். ஜெயவர்த்தன பாராளுமன்றுக்கு தெரிவானதையடுத்து ஓர் இளம் அரசியல் அணியை எதிர்காலத்தை கருத்தில்கொண்டு உருவாக்கினார். அந்த அணியில் ரணில் விக்கிரமசிங்க, காமினி திஸநாயக்க, லலித் அத்துலத்முதலி, டிரோன் பெர்னாண்டோ, ரஞ்சன் விஜயரட்ண போன்றோர் இடம்பிடித்திருந்தனர். இந்த இளம் அணி ஜே. ஆர். ஜெயவர்த்தன எதிர்பார்த்தது போலவே காத்திரமான முறையில் அரசியலில் வளர்ந்த வண்ணமிருந்தது. ஆயினும், ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்குப் பின்னர் ஜனாதிபதியான ஆர். பிரேமதாஸ ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் பாசறையில் இருந்தவர்கள் தனக்கு ஓர் அச்சுறுத்தலாக இருக்கக்கூடாது எனக்கருதினார். இதன் விளைவாக காமினி திஸநாயக்க, லலித் அத்துலத் முதலி, ரஞ்சன் விஜயரட்ண ஆகியோர் ரணசிங்க பிரேமதாஸாவால் ஓரங்கட்டப்பட்டிருந்தனர். ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர ஏனையோர் அகால மரணத்தையும் தழுவினர். அத்துடன், ரணசிங்க பிரேமதாஸவும் கொடிய முறையில் கொல்லப்பட்டிருந்தார்.

காலப்போக்கில் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய கட்சியின் தலைமையோடு இலங்கையின் ஜனாதிபதியாக வருவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலைத் தவிர அவரால் ஜனாதிபதி தேர்தல்கள் எதிலும் இதுவரை வெற்றி பெற முடியவில்லை.

ரணசிங்க பிரேமதாஸ ஆட்சியிலிருந்த போது மக்கள் விடுதலை (ஜே. வி. பி.) முன்னணியினருக்கு எதிரான அடக்குமுறை மிகக் கொடூரமானதாகவே இருந்தது. அச்சமயம் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு பக்க பலமாக ரணில் விக்கிரமசிங்க இருந்தார் என்பதுவும் பரவலான குற்றச்சாட்டாக இருந்தது.

1981ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல் பிரசாரம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றபோது அங்கே ரணிலின் சகாவான காமினி திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு யாழ்ப்பாண பொதுசன நூலக தீவைப்பு சம்பவத்தோடு சம்பந்தப்பட்டிருந்தார் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

தமது தந்தையார் ஓர் இராஜதந்திரியாக இருந்த காரணத்தினாலும் தமது பள்ளிக் காலம் முதல் புத்தகங்களை சேகரிக்கும் வழக்கத்தை கொண்டிருந்ததாலும் தமது கொழும்பு இல்லத்தில் விரிவான நூலகம் ஒன்றை அவர் வைத்திருந்தார்.

ரணிலின் மனைவியார் ஓர் ஆங்கில மொழி பேராசிரியை. இருவரின்சேகரிப்புகளாகவும் 2500 நூல்கள் பலதரப்பட்ட விடயங்கள் தொடர்பாகவும் ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்தில் காணப்பட்டிருந்தன.


இதுதவிர, தம்மிடம் போர்த்துகேயர், ஒல்லாந்தர், மற்றும் ஆங்கிலேயர் கால அரிய பல ஓவியங்கள் இருந்தன என்றும் ரணில் குறிப்பிட்டிருந்ததோடு அவை அனைத்துமே எரிந்து சாம்பராகிவிட்டதாக அவர் கூறியிருந்தார்.

1958ஆம்ஆண்டு தமிழருக்கு எதிரான இனக்கலவரத்தோடு ஆரம்பமான சொத்துகள் உடமைகளுக்கு தீ வைக்கும் செயல் பின்னர் அடிக்கடி இடம்பெற்று 1981ஆம்ஆண்டு ஜூன் மாதத்தில் யாழ்ப்பாண பொதுசன நூலக தீவைப்போடு உச்சத்தை தொட்டு 1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தோடு பல தமிழர்களது சொத்துகள் உடைமைகள் தீயிடப்பட்டிருந்தன.

நூலக எரிப்பு என்னும்போது யாழ்ப்பாணத்தில் பொதுசன நூலகம் 90 ஆயிரம் நூல்களோடும், ஹாட்லிக் கல்லூரி நூலகம் எண்ணிலடங்காத நூல்களோடும் எரிந்து சாம்பராயின. இவைதவிர விமானக் குண்டு வீச்சுகளால் தரைமட்டமான வீடுகள், கட்டடங்கள் மேலும் அதிகமானவை.

இத்தகைய பின்னணியில் வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுற்று பத்து வருடங்களுக்கும் மேலாகியிருக்கலாம். ஆனால், இனக்கலகத்துக்கு தூபமிட்டு நாட்டின் அமைதிக்கு பங்கம் விளைவித்த அடாவடித்தனமான தீவைப்புகள் ஏதோ ஒரு வடிவில் நாட்டில் தொடருவதையே பிரதமர் ரணிலின் இல்லத்தில் ஏற்பட்ட தீயும் அதில் எரிந்த அவரின் நூலகமும் எடுத்துக்காட்டுகின்றன.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**

இரண்டு நாட்களாக ஏற்பட்ட நெருக்கடி விலகும். உங்கள் விருப்பம் நிறைவேறும். சூழ்நிலைகளை புரிந்து கொண்டு செயல்படுவீர்கள். உங்கள் முயற்சி ஒன்று பலித்தமாகும்.

**இடபம்**

சந்திராஷ்டமம் என்பதால் வேலையில் பதட்டம் வேண்டாம். எதிர்பார்ப்பு தள்ளிப் போகும். முயற்சிகளில் பின்ன டைவு உண்டாகும். குடும்பத்தில் சில நெருக்கடியை சந்திப்பீர்கள்.

**மிதுனம்**

நண்பர்களின் உதவியுடன் செயல் ஒன்றை நிறைவேற்றுவீர்கள். லாபகரமான நாள். குடும்பத்தில் ஏற்பட்ட மனகசப்பு நீங்கும். தம்பதியர்களுக்குள் ஒற்றுமை ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சியான நாள்.

**கடகம்**

முயற்சி ஒன்றில் போராடி வெற்றி பெறுவீர்கள். பழைய பிரச்னை ஒன்றிற்கு தீர்வு காண்பீர்கள். மறைமுக எதிரிகள் விலகிச்செல்வர். செயல்களில் வெற்றி காணும் நாள்.

**சிம்மம்**

குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உங்கள் எண்ணம் நிறைவேறும். உங்களைச் சுற்றி இருப்பவர்களில் நல்லவர், பகைவர் யார் என்பதைப் புரிந்து கொள்வீர்கள்.

**கன்னி**

தடைகளைத் தாண்டி செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். மகிழ்ச்சியான நாள். புதிய வாகனம் வாங்கும் முயற்சி நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பழைய கடன்கள் அடைபடும்.

**துலாம்**

உங்கள் செயலில் இருந்து வந்த தடைகள் விலகும். மகிழ்ச்சியான நாள். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னையை அதிகாரிகள் ஆதரவுடன் முடித்து வைப்பீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**விருட்சிகம்**

எதிர்பார்த்த இடத்திலிருந்து உதவி வந்து சேரும். நண்பர்களால் ஒரு முயற்சி நிறைவேறும். தம்பதிகளுக்குள் ஏற்பட்ட பிரச்னை விலகும். புதிய செயல் நிறைவேறும். சக பணியாளர்கள் பாராட்டுவார்கள்.

**தனுசு**

மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். முயற்சியில் தடுமாற்றம் ஏற்படும். எதிர்ப்புகளை சமாளித்து உங்கள் செயலில் வெற்றி அடைவீர்கள். குடும்பத்தினரின் நலனில் அக்கறை அதிகரிக்கும்.

**மகரம்**

மறைமுக எதிர்ப்பு தோன்றினாலும் அவற்றை சமாளிப்பீர்கள். தன்னம்பிக்கை கூடும் நாள். தம்பதியர் ஒருவருக்கு ஒருவர் அனுசரித்து செல்வீர்கள். குடும்பத்தில் நன்மை அதிகரிக்கும்.

**கும்பம்**

எதிர்பாராத பணம் வந்து சேரும். வியாபாரத்தில் லாபம் காண்பீர்கள். பழைய கடன்களை அடைக்க முயற்சிப்பீர்கள். எதிர்பார்த்த செயலால் லாபம் காண்பீர்கள். சேமிப்பில் உங்கள் கவனம் செல்லும்.

**மீனம்**

சுறு சுறுப்பாக செயல்பட்டு பிறருக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். காணாமல் போன ஒரு பொருள் இன்று கிடைக்கும். புதிய நம்பிக்கை உண்டாகும். முயற்சி பலித்தமாகும். பணிபுரியும் இடத்தில் உங்கள் திறமை வெளிப்படும்.

# பொதுக் குழு முடிவுக்கு எதிராக தேர்தல் ஆணைக்குழுவில் மனு

*சென்னை, ஜூலை 13*

நேற்று முன்தினம் நடந்த அ. தி. மு. க. பொதுக் குழுக் கூட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து தேர்தல் ஆணைக்குழுவில் பன்னீர் செல்வம் தரப்பு மனு அளித்துள்ளது.

இந்தப் பொதுக் குழுக் கூட்டத்தில் இடைக்கால பொதுச் செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவு செய்யப்பட்டார். அடுத்த 4 மாதங்களில் பொதுச் செயலாளர் தேர்தல் நடத்தவும் ஓ. பன்னீர்செல்வம் அவரின் ஆதரவாளர்களை கட்சியில் இருந்து நீக்கும் தீர்மானங்களும் இயற்றப்பட்டன.

இதைத்தொடர்ந்து அ. தி. மு. க. பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், கட்சி விதிகளில் திருத்தம் செய்யப்பட்டது. இந்தத் திருத்தங்கள் தேர்தல் ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த நிலையில்., இந்த பொதுக் குழு கூட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து தேர்தல் ஆணைக்குழுவில் பன்னீர்செல்வம் தரப்பு மனு அளித்துள்ளது. அதில், அ. தி. மு. க. பொதுக் குழு கூட்டத்தில் சட்ட விதிகள் மீறப்பட்டுள்ளன. இடைக்கால பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தெரிவை ஏற்கக் கூடாது. அங்கீகாரமும் தரக்கூடாது என்று குறிப்பிடப் பட்டுள்ளது. (ஐ)

# அ. தி. மு. க. பணிமனை கலவரம் 400 கட்சி ஆதரவாளர்கள் கைது!

*சென்னை, ஜூலை 13*

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமை அலுவலகம் அருகே நேற்று முன்தினம் மோதலில் ஈடுபட்ட 400 பேர் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.

சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ. தி. மு. க. தலைமை அலுவலகம் அருகே நேற்று முன்தினம் நடந்த மோதல் குறித்து, ஓ. பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி தரப்பினர் முறைப்பாடுகளை அளித்தனர்.

இதன் பிரகாரம், இருவரின் ஆதரவாளர்கள் தலா 200 பேர் மீது வழக்கு தாக்கல் செய்யப் பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மோதலில் கட்சி நிர்வாகிகள் 47 பேரும், பொலிஸார் இருவரும் காயமடைந்தனர்.

இதேவேளை, செய்தியாளர்களிடம் பேசிய அந்தக் கட்சியின் இடைக்கால பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி, பொலிஸார் முழுப் பாதுகாப்பு அளிக்கவில்லை. இதனால், அலுவலகஆவணங்களை எல்லாம் சமூக விரோதிகள் அள்ளிச் சென்றுள்ளனர். இந்த சிறப்பு பொதுக் குழுக் கூட்டத்தில் முன்னாள் ஒருங்கிணைப் பாளர் பன்னீர்செல்வம் கட்சி அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். அவர் அத்துமீறி கட்சி தலைமை அலுவலகத்துக்குள் ரவுடிகளுடன் நுழைந்து, கட்சி நிர்வாகிகளை தாக்கியுள்ளார்.

அ. தி. மு. க. தலைமை அலுவலகத்தில் நடந்த தாக்குதல் என்பது தி. மு. க. அரசும், பன்னீர் செல்வமும் இணைந்து போட்ட திட்டம். நீதி மன்றத்தில் நியாயத்தைப் பெற்று, அ. தி. மு. க. தலைமை அலுவலகம் திறக்கப்படும்- என்றார். (ஐ)

# சசிகலா கட்சிக்குள் நுழைவதை தடுக்கவே விதிகளில் திருத்தம்?

*சென்னை, ஜூலை 12*

சசிகலாவும் அவருடைய குடும்பத்தினரும் எந்த வகையிலும் அ. தி. மு. கவுக்குள் நுழைந்துவிடவோ, பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிடவோகூடாது என்ற நோக்கில்தான் தேர்தல் விதியில் மாற்றம் கொண்டுவரப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அ. தி. மு. க. செயல்குழு மற்றும் பொதுக் குழுக் கூட்டம் சென்னையில் திங்கட்கிழமை பரபரப்புடன் நடைபெற்று முடிந்தது.

செயல்குழுவிலும் பொதுக்குழுவிலும் அ. தி. மு. கவில் ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு பதிலாக மீண்டும் பொதுச் செயலாளர் பதவி கொண்டுவருதல், எடப்பாடி பழனிசாமியை இடைக்கால பொதுச் செயலாளராக நியமித்தல் உள்ளிட்ட 16 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூடுதலாக, ஓ. பன்னீர்செல்வத்தை கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கும் சிறப்புத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதனிடையே, கட்சியின் பொதுச் செயலாளருக்கு கூடுதல் அதிகாரம் வழங்கும் விதமாக சட்ட விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு பொதுக்குழுவில் ஒப்புதல் பெறப்பட்டது.

அ. தி. மு. கவில் துணை ஒருங்கிணைப்பாளருக்கு பதில் துணைப் பொதுச்செயலாளர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. துணை பொதுச் செயலாளரைப் பொதுச்செயலாளரே நியமனம் செய்யும் வகையில் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும், பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிடுவோருக்கான கட்சியின் விதி-20அ பிரிவு-1இல் முக்கிய திருத்தம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த விதியில், கட்சி ஒருங்கிணைப்பாளர் அல்லது இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகளுக்கு போட்டியிடுபவர்கள், தேர்தல் நடைபெறும் நாளுக்கு முன்பாக, தொடர்ந்து 5 ஆண்டுகள் கழகத்தின் அடிப்படை உறுப்பினராக இருந்தாலே போதும் என நடைமுறையில் இருந்தது.

ஆனால், தற்போது கட்சியின் பொதுச் செயலாளர் பொறுப்பிற்கு போட்டியிடுவோர் தொடர்ந்து 10 ஆண்டுகள் கட்சியில் உறுப்பினராகவும், தலைமைக் கழக அளவில் பொறுப்பாளராக 5 ஆண்டுகளும் பணியாற்றி இருக்க வேண்டும் என்ற திருத்தம் கொண்டுவரப்பட்டு தேர்தல் ஆணையத்திற்கும் நேற்றுமுன்தினம் மாலையே அனுப்பப்பட்டுள்ளது.

இந்த புதிய சட்டத் திருத்ததால், சசிகலா மற்றும் அவரது குடும்பத்தினர் கட்சியின் முக்கிய பதவியான பொதுச் செயலாளர் பதவிக்குப் போட்டியிட இயலாது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# இலங்கையின் அத்துமீறலை வேடிக்கை பார்க்கக்கூடாது!

## பா. ம. க. தலைவர் சொல்கிறார்

*சென்னை, ஜூலை 13*

இலங்கை கடற்படையினரின் தொடர் அத்துமீறலை மத்திய, மாநில அரசுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது, இலங்கை அரசை கடுமையாக கண்டிக்க வேண்டும் என்று பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நேற்றுஅவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்:

“வங்கக்கடலில் கச்சதீவுக்கும், கோடியக்கரைக்கும் இடையே மீன்பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மீனவர்கள் 6 பேரை அவர்களின் விசைப்படகுடன் இலங்கை கடற்படை கைது செய்து சிறையில் அடைத்திருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது!

கடந்த 10 நாட்களில், மூன்றாவது முறையாக தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்திருக்கின்றனர். இலங்கை கடற்படையினரின் இந்த தொடர் அத்துமீறலை மத்திய, மாநில அரசுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. சிங்கள அரசை கடுமையாக கண்டிக்க வேண்டும்.

கடந்த சில நாட்களில் கைது செய்யப்பட்ட தமிழகம் மற்றும் புதுவை மீனவர்கள் 23 பேரையும், அவர்களின் படகுகளுடன் மீட்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். கடந்த காலங்களில் பறிமுதல் செய்யப்பட்ட தமிழக மீனவர்களின் படகுகளையும் விரைந்து மீட்க வேண்டும்!” என்று வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# கொழும்பில் துப்பாக்கி பிரயோகம் தம்பதியர்களில் ஒருவர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 13

கொழும்பு, புதிய செட்டியார் தெருவின் ஹின்னி அப்பு ஹாமி சந்தியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தம்பதியினர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எவரும் கைதுசெய்யப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# 19 ஆம் திகதி வேட்பு மனுக்கள் தாக்கல் 20 ஆம் திகதி புதிய ஜனாதிபதி தெரிவு

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று ஜனாதிபதி பதவியில் இருந்து விலகவுள்ள நிலையில் ஜூலை 15 ஆம் திகதி பாராளுமன்றம் கூடி ஜனாதிபதி பதவி வெறிதாக்கப்பட்டதை அறிவிக்கவுள்ளது.

தொடர்ந்து ஜூலை 19 ஆம் திகதி புதிய ஜனாதிபதிக்கான வேட்புமனு தாக்கல் நடைபெறும் என பாராளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

அதைத் தொடர்ந்து அரசியலமைப்புச் சட்டம் 1981 சிறப்பு விதிகளின் படி ஜூலை 20ஆம் திகதி புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான வாக்கெடுப்பு பாராளுமன்றில் நடைபெறும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனாதிபதி பின்னர் அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பார். தொடர்ந்து அரசியலமைப்பு விதிகள் மற்றும் அத்தியாவசிய சேவைகளுக்கு புதிய ஜனாதிபதி வழி வகுப்பார்.

நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களின் விசேட கூட்டத்தின் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கோட்டாபய பதவி விலகினால் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## சட்டமா அதிபருடன் ரணில் ஆலோசனை

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி பதவிக்கு வெற்றிடம் ஏற்படின் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலான சட்டமா அதிபரின் நிலைப்பாடு பிரதமரின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் சட்டமா அதிபரின் நிலைப்பாடு வினவப்பட்டதன் அடிப்படையிலேயே இந்த பதில் அனுப்பப்பட்டுள்ளது. எனினும் அதில் அடங்கியுள்ள தகவல்கள் வெளியாகவில்லை.

முன்னதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று தமது பதவி விலகலை உத்தியோகபூர்வமாக அறிவிப்பார் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்திருந்தார். (அ)

# சஜித்தை ஜனாதிபதியாக்குவதற்கு கட்சித் தலைவர்கள் ஆதரவளிப்பர்

## ஐக்கிய மக்கள் சக்தி நம்பிக்கை

**கொழும்பு, ஜூலை 13**

**நாட்டில் அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது என்று அக் கட்சியின் தேசிய அமைப்பாளரான பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.**



கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல், பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு பொறுப்புள்ள கட்சி என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி தீவிரமாகச் செயற்படும்.

ஜனாதிபதி பதவிக்கு சஜித் பிரேமதாஸவை பெயரிடுவதற்கு கட்சி தீர்மானித்துள்ளது. இதற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கும் என எதிர்பார்க்கின்றோம்..

பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பொது வேலைத் திட்டமொன்றைச் செயற்படுத்தவேண்டும். அது வெற்றிகரமாக முடிவடைந்த பின்னர் பொதுத்தேர்தலுக்கு செல்ல முடியும்-என்றார். (அ)

# ஊழலற்ற நாட்டை நேசிக்கும் ஒருவரிடம் ஆட்சி அதிகாரத்தை வழங்குவது அவசியம்

## மட்டக்களப்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூலை. 13

ஊழல் அற்ற நாட்டை நேசிக்கும் ஒருவரிடம் ஆட்சியதிகாரத்தை வழங்கிவிட்டு தற்போதைய ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகவேண்டும் எனவும் அவ்வாறு பதவி விலகும்வரையில் போராடப் போவதாகவும் மட்டக்களப்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக அரசாங்கத்துக்கு எதிராகவும் ஜனாதிபதி,



பிரதமருக்கு எதிராகவும் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தி மற்றும் பொதுமக்கள் இணைந்து இந்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்த போராட்டத்தின் போது அரச நிறுவனங்களை விற்பதை நிறுத்து, மக்கள் ஆட்சிக்கு இடம்கொடு, திருடர்களை விரட்டியடிப்போம் போன்ற கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஜனாதிபதி பிரதமருக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்பட்டதுடன் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தேர்தல் ஒன்றை நடத்துமாறும் கோரிக்கைகள் முன்வைக்கப் பட்டன. (அ)

# ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை ஏற்கவோ, நியாயப்படுத்தவோ முடியாது

## யாழ்.கலைப்பீட மாணவர் ஒன்றியம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஜூலை 13

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலையும் ஏற்றுக்கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாதென யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்திற்கு முன்பாக நேற்று இடம்பெற்ற போராட்டத்துக்கு பின்னர் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில்-

வடக்கு-கிழக்கில் ஊடக அடக்குமுறை என்பது கடந்த 30 வருடங்களுக்கு மேலாக கட்ட விழ்த்துவிடப்பட்டுள்ளது. வடக்கு-கிழக்கிலே 39 ஊடகவியலாளர்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றார்கள். அதேபோல ஊடக நிறுவனங்களும் தாக்கப்பட்டிருக்கின்றன. கணிசமான ஊடகவியலாளர்கள் அச்சம் காரணமாக நாட்டை விட்டு வெளியேறி இருக்கின்றார்கள். இந்த நேரம் வரை ஊடகத்துறை என்பது ஒரு நெருக்கடியான துறையாகவே காணப்படுகின்றது.

இந்த நிலையில் தான் கொழும்பில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவம் மீண்டும் பதிவாகியுள்ளது. வடக்கு-கிழக்கு ஊடகவியலாளர்களுக்கு பரீட்சயமாக இந்த தாக்குதல்கள் காணப்பட்டாலும் கொழும்பில் அது மீண்டும் எதிரொலிக்கிறது. இந்த நிலையில் வடக்கு-கிழக்கில் ஊடகவியலாளர்கள் மீதான காணாமலாக்கல், படுகொலைகள், அச்சுறுத்தல்கள் போன்ற செயற்பாடுகளை நாங்கள் எவ்வாறு கண்டித்தோமோ தற்பொழுது கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலையும் ஏற்றுக்கொள்ளவோ நியாயப்படுத்தவோ முடியாது.

அந்தவகையில் எமது கடுமையான கண்டனத்தை தெரிவிப்பதோடு, தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு உரிய நீதி கிடைக்க வேண்டும். தமிழ் மக்கள் எதிர்கொள்ளுகின்ற அனைத்து மட்ட பிரச்சனைகளிலும் எமது யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம் நீண்டகாலமாக செயற்பட்டு வருகிறது. அந்த வகையில் இச்செயற்பாடுகளின் போது ஊடகங்களின் பங்களிப்பும் எமது கலைப்பீட மாணவர் ஒன்றியத்தோடு பின்னிப்பிணைந்ததாகவே காணப்படுகிறது.

ஆகவே இனிவரும் காலங்களில் ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதோ அச்சுறுத்தப்படுவதோ தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

அதனை அரச நிர்வாகம் உறுதிப்படுத்த வேண்டும் என்பதனை யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியமாக வலியுறுத்தி நிற்கின்றோம்-என்றுள்ளது. (அ)

## எரிபொருள் வழங்க வலியுறுத்தி

# ஏ-9 வீதியை மூடி பொதுமக்கள் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை 13

எரிபொருள் வழங்க கோரி ஏ-9 வீதியை வழிமறித்து யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு அருகில் உள்ள ஐ.ஓ.சி. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நீண்ட நாட்களாக எரிபொருளுக்காக காத்திருந்தவர்களே ஏ-9 வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இணைய வழியில் பதிவு செய்பவர்களுக்கே எரிபொருள் வழங்கப்படும் என மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் தெரிவித்ததால் அங்கு நீண்ட நாட்களாக காத்திருந்த பொது மக்களே வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் ஏ-9 வீதி வழியான போக்குவரத்து தடைப் பட்டது. (அ)

# சிங்கள,பௌத்த அதிகாரத்தை எவராலும் அழித்துவிடமுடியாது

## ஓமல்பே சோபித தேரர் கூறுகிறார்

**கொழும்பு, ஜூலை 13**

**“சிங்கள,பௌத்த அதிகாரத்தை எவராலும் அழிக்க முடியாது. அது நிலையானது. இதுவே யதார்த்தபூர்வமான உண்மைகூட. சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியே கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்தார். அதனால்தான் அவரை பதவி விலக வைப்பதற்கு சிங்கள, பௌத்த சக்தி முன்னின்று செயற்பட்டது.”**

-இவ்வாறு கலாநிதி ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

தொழிற்சங்க பிரமுகர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் சிலருடன் இணைந்து கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பின்போதே தேரர் இவ்வாறு அறிவிப்பு விடுத்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவையும், அவர் தலைமையிலான அரசை விரட்டியடிப்பதற்கும் மகா சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகளுக்கு இவரே தலைமைத்துவம் வழங்கியிருந்தார். அரசுக்கு எதிராக சங்க பிரகடனத்தை வெளியிடுவதிலும் முன்னின்று செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையிலேயே மேற்படி போராட்டத்தில் சிங்கள, பௌத்த சக்தியின் வகிபாகம் பற்றியும் தேரர் விவரித்தார்.

“சிங்கள, பௌத்த தலைமைத்துவம், சிங்கள, பௌத்த அதிகாரம் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் எமக்கு எதிராக கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இந்நாட்டில் சிங்கள, பௌத்த அதிகாரத்தை எவராலும் இல்லாது செய்ய முடியாது. அது நிலையானது. சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி சிலர் முன்னெடுக்கும் செயற்பாடுகளையே நாம் விமர்சித்துவருகின்றோம்.

சிங்கள, பௌத்த அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியே கோட்டாபய ஆட்சிக்கு வந்தார். அவர் வசம் இருந்த சிங்கள, பௌத்த அதிகாரம் - சக்தி தற்போது இல்லாமல் போயுள்ளது. அதனால்தான் பதவி விலகுமாறு வலியுறுத்தப்பட்டது. ஏனைய இன மற்றும் மத மக்களின் பூரண ஒத்துடைப்புடனேயே சிங்கள, பௌத்த சக்தியால் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஏனைய இன, மத மக்களின் பூரண பங்களிப்புடன் சிங்கள, பௌத்த சக்திதான் செயற்படுகின்றது என்பதை இன்றும் தெளிவாக கூறிவைக்கின்றோம். ராஜபக்ஷ குடும்பம் பயன்படுத்திய சிங்கள, பௌத்த சக்தி இத்துடன் முடிந்துவிட்டது.

எனவே, இனியும் ஏமாறக்கூடாது. ஏனைய இன மற்றும் மதங்களின் ஒத்துழைப்புடன் எதிர்காலத் தலைவரை தேர்ந்தெடுக்க நாம் முன்வர வேண்டும்.

ஜனாதிபதி பதவி விலக முன்னர், புதிய பிரதமரை நியமிப்பார் என நம்புகின்றோம்.

எனவே, ஜனாதிபதி பதவி விலகியதும் ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், அலரிமாளிகை உட்பட மக்கள் வசம் உள்ள அரச வளங்கள் பாதுகாப்பு தரப்பு களிடம் கையளிக்கப்பட வேண்டும்.

அத்துடன், கட்சி, அதிகாரப் போட்டியை கைவிடுத்து சர்வ கட்சி அரசுக்காக கட்சிகள் பொது நிலைப்பாட்டுக்கு வர வேண்டும். அவ்வாறு வரமுடியாவிட்டால் தகுதியான நபரை நியமிக்க நாம் தயார். தொழிற்சங்க, சிவில் செயற்பாட்டாளர்கள் பாராளுமன்றம்வர, தேசியப்பட்டியல் எம்.பிக்கள் ஐவர் பதவி விலகவேண்டும்- என்றார். (அ)



# தனியார் பஸ் சங்கத்தினர் மன்னாரில் போராட்டம்!

## மக்களின் போக்குவரத்து பாதிப்பு

*மன்னார், ஜூலை 13*

மன்னாரில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் மன்னார் தனியார் பஸ் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக மக்கள் பாரிய அளவில் பாதிக்கப்பட்டனர்.

அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் தமது பஸ்கள் ஊடாக வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் மக்களுக்கும் தனியார் பஸ் சங்கத்தினருக்கும் இடையில் தர்க்க நிலை ஏற்பட்டது. அரச போக்குவரத்து சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் தனியார் பஸ்களை வீதியின் நடுவில் நிறுத்தியமைக்கு மக்கள் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

குறித்த தனியார் பஸ்களை அவ்விடத்தில் இருந்து அகற்றி அரச போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் சுமுகமான போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் நீண்ட நேரம் பஸ்ஸுக்காக காத்திருந்த மக்கள் கொதிப்படைந்த நிலையில் தர்க்கத்தில் ஈடுபட்டதோடு அரச போக்குவரத்துச் சேவையை முன்னெடுக்க முடியாத வகையில் வீதியை மறித்து தரித்து நின்ற தனியார் பஸ்களை அகற்ற முயற்சி செய்தனர்.

பின்னர் மக்கள் குறித்த பஸ்களை அவ்விடத்தில் இருந்து அகற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.குறித்த தனியார் பஸ்களின் உரிமையாளர்கள் குறித்த பஸ்களை அவ்விடத்தில் இருந்து எடுத்துச் சென்றனர்.

அதனை தொடர்ந்து நீண்ட நேரத்தின் பின் அரச போக்குவரத்துச் சேவைகள் வழமை போல் இடம்பெற்றது.

தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் முன்னெடுத்த போராட்டம் பொதுமக்களை பாதிக்காத வகையில் முன்னெடுக் கப்பட்டிருக்கவேண்டும் என மக்கள் விசனம் தெரிவித்தனர்.

மன்னார் டிப்போவுக்கு வழங்கப்பட்ட டீசலில் மன்னார் மாவட்ட தனியார் போக்குவரத்துச் சங்க பஸ்களுக்கும் வழங்குமாறு உரிய தரப்பினால் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் அண்மையில் வழங்கப்பட்ட டீசலில் தற்போது வரை 2413 லீற்றர் டீசல் மாத்திரமே தனியார் பஸ்களுக்கு வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து டீசல் எவையும் தனியார் பஸ்களுக்கு வழங்கவில்லை.

தனியார் பஸ் சங்க உரிமையாளர்கள் மன்னார் டிப்போ அதிகாரிகளிடம் டீசல் கோரிய போதும் அது வழங்கப்படவில்லை.

கடந்த 5 ஆம் திகதி காலை தனியார் பஸ்கள் பணிப்பகிஸ்கரிப்பில் ஈடுபட்டதோடு அரச போக்குவரத்து சேவையை மேற்கொள்ள முடியாத வகையில் தனியார் பஸ்களினால் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதோடு தமக்கான எரிபொருளை வழங்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனால் போக்குவரத்துச் சேவைகள் சிறிது நேரம் முழுமையாக பாதிக்கப்பட்டதால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர், இராணுவம்,பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது இலங்கை போக்குவரத்துச் சபையின் எண்ணெய்க் குதங்களில் இருந்து தனியார் பஸ்களுக்கு டீசல் வழங்குவது என்ற அரச நிலைப்பாட்டுக்கு அமைய மன்னார் சாலைக்கு 6600 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் அவற்றில் 2500 லீற்றர் டீசலையும்,13200 லீற்றர் டீசல் வருமாக இருந்தால் 5000 லீற்றர் டீசலையும் தனியார் பஸ்களுக்கு வழங்குவது என குறித்த கலந்துரையாடலின்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் தனியார் பஸ் உரிமையாளர்கள் முன்னெடுத்த பகிஷ்கரிப்புப் போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்று முன் தினம் கிடைக்கப்பெற்ற எரிபொருள் தனியார் பஸ்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக உரிய தரப்பினரிடம்வினவிய போதும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

இதனையடுத்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை முதல் தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் சேவையை இடைநிறுத்திப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# அலரி மாளிகைக்குள் இரு குழுக்கள் மோதல்

## பெண்கள் உட்பட10 பேர் காயம்

*கொழும்பு, ஜூலை 13*

அலரி மாளிகைக்குள் நேற்று காலை இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் குறைந்தது 10 பேர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் பெண்களும் அடங்குகின்றனர். இவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன.

இந்த மோதல் சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஜூலை-09 ஜனாதிபதி மற்றும் அரசுக்கு எதிரான மக்கள் புரட்சியின் போது ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி வாசஸ்தலம் என்பவற்றுடன், அலரி மாளிகையும் மக்களால் கைப்பற்றி கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. இங்கு போராட்டக்காரர்கள் தங்கியுள்ள நிலையிலேயே நேற்றுக் காலை இரு குழுக்களுக்கு இடையே மோதல் வெடித்தது. (அ)

# 203 கிலோ கஞ்சா பொதிகள் மன்னாரில் நேற்று சிக்கின!

## பொலிஸாரால் ஒருவர் கைது

*மன்னார், ஜூலை 13*

மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக் கடவை பகுதியில் சுமார் 203 கிலோ கிராம் கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

முழங்காவில் கடற்படை முகாம் அதிகாரிகளால் நேற்று முன் தினம் திங்கட்கிழமை மாலை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது இந்த கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்திற்கிடமான படகொன்றை சோதனைக்கு உட்படுத்தியபோது அதில் மறைத்து வைக்கப் பட்டிருந்த நிலையில் கேரள கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

சம்பவம் தொடர்பில் வெள்ளாங்குளம் பகுதியை சேர்ந்த 45 வயதான ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலுப்பைக்கடவை பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)









யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்றுக் காலை பக்தி பூர்வமாக இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் இதில் பங்கேற்று அம்மனின் அருளாசி பெற்றனர்.

(படங்கள் : ஐங்கரன் சிவசாந்தன்)

# பொதுத் தேர்தலை நடத்துவதற்கு ரூ.1000 கோடிக்கு மேல் செலவாகும்

## தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தகவல்

கொழும்பு, ஜூலை. 13

**பொதுத் தேர்தலை நான்கு மாதங்களுக்கு பிறகே நடத்தக் கூடியதாக இருக்கும் எனவும், தேர்தல் செலவு ஆயிரம் கோடி ரூபாவையும் தாண்டும் எனவும் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சி ஹேவா தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உடனடியாக பொதுத் தேர்தலை நடத்த முடியாது. சகல அவசதிகளும் செய்து கொடுக்கப்பட்டாலும் நான்கு மாதங்களாவது கட்டாயம் தேவை. தேர்தலை நடத்துவதற்கு தற்போதைய சூழல் பொருத்தமானதாக அல்ல. வேட்பாளர்களுக்கு மக்கள் முன் செல்ல முடியுமா என்று கூட தெரியவில்லை.

அத்துடன், கடதாசி உட்பட அனைத்து பொருட்களின் விலைகளும் அதிகரித்துள்ளதால் தேர்தலை நடத்துவதற்கு ஆயிரம் கோடி ரூபாவை விடவும் அதிக நிதி தேவைப்படும் - என்றார். (அ)

## பஸ் சேவைகள் ஸ்தம்பிதம்

கொழும்பு, ஜூலை. 13

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக நேற்று பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் தனியார் பஸ் சேவைகள் தடைப்பட்டதால் பயணிகள் பல சிரமங்களை எதிர்கொண்டனர்.

தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு ரயிலில் வரும் பயணிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

இதேவேளை, ஹற்றன் - லங்காம டிப்போவில் இருந்து தனியார் பஸ்களுக்கான எரிபொருள் 10 நாட்களுக்கு பின்னர் நேற்று வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அனுர - சம்பிக்க முக்கிய சந்திப்பு

கொழும்பு, ஜூலை. 13

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், சம்பிக்க ரணவக்க தலைமையிலான 43ஆம் படையணி உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஜே.வி.பியின் தலைமையகத்தில் நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

சந்திப்பின் பின்னர் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும், அதுவரை அமையும் சர்வகட்சி அரசுக்கு ஆதரவு வழங்கத் தயார் எனவும் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

அத்துடன், தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் ஆட்சியைப் பொறுப்பேற்கத் தயார் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

## பாராளுமன்ற குழு கூட்டங்கள் தற்காலிகமாக நிறுத்திவைப்பு

கொழும்பு, ஜூலை. 13

நாட்டின் தற்போதைய நிலையைக் கருத்திற்கொண்டு பாராளுமன்ற குழுக் கூட்டங்களை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக் கூட்டுத்தாபன மொத்த களஞ்சிய முனைய நிறுவனம் மற்றும் பொது பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள் நேற்று கோப் குழுவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். எனினும் நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு அந்தக் கூட்டங்களை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்குழுவின் தலைவர் பேராசிரியர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

பொது பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் கடந்த வாரத்தில் கோப் குழுவில் தெரிவித்த தனிப்பட்ட கருத்தை அடிப்படையாக வைத்து எரிபொருள் விலை தொடர்பில் நாட்டில் பல்வேறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த நிலையில் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தபானத்தின் தலைவர் ஆகியோரை அழைத்து விசாரணை நடத்த கோப் குழு தீர்மானித்திருந்தது. அந்த கூட்டம் நேற்று நடைபெறவிருந்த நிலையில் அக்கூட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட் டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

## இலங்கை நிலைமையை அவதானிக்கின்றது சீனா

கொழும்பு, ஜூலை. 13

“இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைவரம் தொடர்பில் சீனா உன்னிப்பாக அவதானித்து வருகிறது.” - என்று அந்நாட்டு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், நட்பு நாடு என்ற வகையில் இலங்கைக்கான சீனாவின் ஒத்துழைப்புகள் தொடரும் என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## கட்சி தலைவர்கள் - போராட்டக்காரரர் இடையிலான சந்திப்பு உடன் இரத்து

கொழும்பு, ஜூலை. 13

போராட்டக்காரர்களுக்கும், கட்சித் தலைவர்களுக்கு இடையில் நேற்று நடைபெறவிருந்த கலந்துரையாடல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

சந்திப்புக்கான முடிவு கூட்டு தீர்மானம் இல்லை என்பதனால் கலந்துரையாடல் இடம்பெறாது என போராட்டக்காரர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பல தரப்பினரும் தெரிவித்தனர்.

இது மற்றவர்களுக்குத் தெரிவிக்காமல் ஒரு தரப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (அ)

# ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகையில் சொத்துகள் கொள்ளை குறித்து விசாரணை

கொழும்பு, ஜூலை. 13

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்கு ஏற்பட்டுள்ள சேதங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துமாறு மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார்.

கொழும்பு பிரதிப் பொலிஸ் மா அதிபர் சந்திரகுமார மற்றும் மேல் மாகாண குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரோஹான் பிரேமரத்ன ஆகியோருக்கு அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

சூம் தொழிற்நுட்பம் ஊடாக நடைபெற்ற கூட்டத்தில் அவர் உத்தரவை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை மற்றும் ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றுக்குள் சென்றவர்கள் அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளதாகவும் பெறுமதியான பொருட்களை திருடிச்சென்றுள்ளதகவும் தேசபந்து தென்னக்கோன் இந்த கூட்டத்தில் கூறியுள்ளார்.

உடனடியாக இது சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் சாட்சியங்கள் அழிக்கப்படும் முன்னர் சாட்சியங்களை சேகரிக்க வேண்டும் எனவும் பாதுகாப்பு கமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளை உடனடியாக பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தென்னக்கோன் கூறியுள்ளார். (அ)

# உலக நாடுகள் எங்கும் அபே மறைவுக்கு அஞ்சலி

## இந்தோ - பசிபிக் பகுதியில் சமாதானம் நிலவ குவாட் அமைப்பை உருவாக்குவதில் முன்னின்றவர்!

**- ஜெம் ஆர். வீரமணி**



ஜப்பான் நாட்டின் நீண்டகால பிரதமரும், உலக நாடுகளுடன் மிகவும் நெருங்கிய உறவு பாராட்டியவருமான ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஸோ அபே, எதிர்பாராத விதமாக சுடப்பட்டு மரணமடைந்தது நம் எல்லோருக்கும் பேரிழப்பு ஆகும்.

ஜப்பான் நாட்டின் நட்பையும், அபேயுடனான உறவை அங்கீகரிக்கும் வகையிலும், அவர் மறைவுக்கு ஒரு நாள் இந்திய நாடு துக்கம் அனுசரித்தது. இந்தியாவைத் தொடர்ந்து அமெரிக்காவும் துக்கம் அனுசரித்தது குறிப்பிடத்தக்கது.

அபே குடும்பத்தில், அவருடைய தந்தையார், பாட்டனார் என பல குடும்ப அங்கத்தினர்கள் அரசியல் தலைவர்களாகவும் பிரதமர்களாகவும் பல்லாண்டுகளுக்கு முன்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். அப்படியிருந்தும் அபே பாரம்பரிய அரசியல் தொடர்பை முன்னிலைப்படுத்தாமல், தன் கட்சியின் கொள்கைகளையும், அரசாங்க ஆட்சியின் சாதனைகளையுமே முன்னிறுத்தி அரசியல் பணியாற்றி வந்தார். அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி வெளியில் எதுவும் தெரியாது. 1987-இல் திருமணம் செய்துகொண்ட அவருக்குக் குழந்தைகள் இல்லை.

ஜப்பான் மக்கள் நம் நாட்டை பல காரணங்களுக்காக மரியாதையுடன் வணங்கி அன்பு பாராட்டுகிறார்கள். முதலாவதாக புத்த மதம். இரண்டாவதாக புத்த மதத்தின் பிரிவான ஜென் பௌத்தம். ஜென் பௌத்தத்தைத் தொடங்கியவர் தமிழகத்தின் காஞ்சிபுரத்தின் முன்னாள் மன்னரின் மகனான போதி தர்மர். அதனால் அவர் மீது ஜப்பான் மக்களுக்கு மரியாதையும் பற்றுதலும் மிகவும் அதிகம். ஜப்பான் நாட்டின் ஜூடோ, சைனீஷ் கராத்தே, குங்ஃபூ, ஆழ்ந்த தியானம் ஆகியவை அனைத்தும் போதி தர்மர் வழியில் வந்தவை என்பது குறிப்பிடத் தக்கது. 1000 புத்தர் சிலை, எங்கு பார்த் தாலும் புத்தர் வழிபாடு என ஜப்பான், இந்தியாவை இயற் ணகையாகவே பின்பற்றியது.

இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஜப்பான் தோல்வியடைந்து, அந்நாட்டின் போர்க்குற்றவாளிகளை தண்டிக்க ஒரு நடுவர் மன்றம் உருவாக்கப்பட்டது. அதில் இந்தியாவின் சார்பாக மேற்கு வங்கத்தைச் சேர்ந்த உயர்நீதிமன்ற நீதிபதி பால் என்பவர் உறுப்பினராக இருந்தார். ஜப்பான் நாட்டின் அதிகாரிகள், அமைச்சர்கள் மற்றும் பலரும் போர்க்குற்றவாளிகள் அல்லர், அவர்கள் அரசின் கடமையைத் தான்செய்தார்கள்என்கிற தீர்ப்பை அளித்து, ஜப்பான் நாட்டின் மக்களின் அன்பையும் பாராட்டையும் பெற்றார் அவர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்பு உலகின் பல நாடுகளும் ஜப்பானை ஒதுக்கி வைத்தபோது, அப்போதைய இந்திய பிரதமர் ஜவாஹர்லால் நேரு, நம் நாட்டிலிருந்து 'இந்திரா' என்று பெயரிடப்பட்ட யானை ஒன்றை ஜப்பானுக்கு அன்பளிப்பாக அளித்தார். அந்த யானையின் வரவு, ஜப்பான் நாட்டை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. ஆழ்ந்த சோகத்தில் மூழ்கியிருந்த ஜப்பானிய மக்கள், புத்துணர்வு பெற்றார்கள். ஜப்பான் நாடு முழுவதும் இந்திய யானை 'இந்திரா'வைப் பற்றிய மகிழ்ச்சி அலை பரவியது. அதற்கு இன்றும் ஜப்பானிய மக்கள் அவர்களது பாராட்டை தெரிவிக்கிறார்கள்.

நாடு முன்னேறுவதற்கு அடிப்படையான இயந்திரங்கள் செய்யவும், கட்டடங்கள் கட்டவும், இரும்பு உருக்குப் பொருட்கள் ஏராளமாக தேவை என்ற சூழ்நிலையில், ஜப்பானுக்கு எந்த நாடும் இரும்பு தாது அனுப்பவில்லை. அப்போது தமிழ்நாட்டைச் சேர்ந்த முருகப்பா குழுமத்தின் அப்போதைய தலைவர் ஏ.எம்.எம். அருணாசலம் பல லட்சம் டன் இரும்புத் தாதுகளை தொடர்ந்து ஜப்பான் நாட்டிற்கு ஏற்றுமதி செய்தார். அதற்கும் ஜப்பானிய அரசும், மக்களும் இன்றும் இந்திய நாட்டிற்கு நன்றி பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அடுத்ததாக ஜப்பான் அணுகுண்டு வீசப்பட்டு ஹிரோஷிமா, நாகசாகி ஆகிய இரண்டு நகரங்கள் பாழ்பட்டு பல லட்சம் மக்கள் மரணமடைந்தனர். நீண்ட காலம் கேன்சர் போன்ற நோய்களினால் துன்புற்று லட்சக்கணக்கான மக்கள் இறந்தார்கள். ஆகவே அணு ஆயுதத் தயாரிப்பு கூடாது, போர் புரிந்து மற்ற நாடுகளை தாக்குவதும் கூடாது என்று ஜப்பானிய அரசியல் அமைப்பு சட்டத்தை மாற்றியமைத்தார்கள். அதுவும் ஒரு இந்திய மார்க்கம் என்று தான் சொல்ல வேண்டும்.



1961-இல் மூதறிஞர் ராஜாஜி தன் தள்ளாத வயதில் அமெ ரிக்கா சென்று அப்போது அங்கு அதிபராக இருந்த கென்னடியை சந்தித்து, 'அமெரிக்கா அணு ஆயுதங்களை அழித்து விட வேண்டும். அதே போல எல்லா நாடுகளும் அணு ஆயுதங்களை அழித்து விட வேண்டும். இந்த பூமி மீது அணு ஆயுதங்கள் எங்கும் இருக்கக்கூடாது, போரில் உபயோகப்படுத்தக்கூடாது என்ற தடைச்சட்டம் வேண்டும்' என்று வலியுறுத்தி வந்தார். இந்த அணு ஆயுத ஒழிப்பு, ஜப்பானின் தீவிர மக்கள் கொள்கையாக இருந்தது.

ஜப்பானிய மக்களின் பண்பாடு, கலாசாரம் புத்த மதத்தின் கொள்கைகளுக்கு ஏற்ப உள்ளது. எனவே இப்படிப்பட்ட அன்பும் கலாசாரமும், புத்த மதக் கொள்கைகளும் 'மார்ஷியல் ஆர்ட்ஸ்' என்று சொல்லத்தக்க போதி தர்மர் வழியில் ஜென் பௌத்தம் அளித்த தியானமும், விளையாட்டுகளும் இவை அனைத்தும் இந்தியத் தன்மை கொண்டவை.

அதனால்தான், இந்திய நாட்டிற்கு எப்போதுமே ஜப்பான் நாட்டின் ஓடிஏ என்று அழைக்கப்படும் 'ஓவர்சீஸ் டெவலப்மெண்ட் அசிஸ்டன்ஸ்' நிதியுதவியை அளித்து வந்தார்கள். அப்படி ஓடிஏ நிதியுதவி அதிகம் பெற்ற நாடுகளில், இந்திய நாடு முன்னிலை வகிக்கிறது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஜப்பான் நாட்டின் வளர்ச்சியும், அந்த நாட்டின் பண்பாடுகளும் மிகவும் பிடித்திருந்தன. அவர் குஜராத் மாநிலத்தின் முதல்வராக இருந்தபோது, மாநில அரசின் குழுவுக்குத் தலைமை ஏற்று, ஜப்பான் நாட்டிற்குச் சென்று தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக்கொண்டிருந்தார். அப்போதே ஷின்ஸோ அபேயை அவர் பிரதமராக இருந்தபோதே அறிந்திருந்தார். அதன் பிறகு அந்த உறவு மிகவும் நெருக்கமானது.

அந்த அடிப்படையில் இந்தோ - பசிபிக் பகுதியில் சமாதானம் நிலவ வேண்டும். இந்து மகாக் கடலிலும், பசுபிக் கடலிலும் தடையில்லாத, எந்த நாட்டிற்கும் பாதிப்பில்லாத சூழ்நிலை இருக்க வேண்டும் என்று இருவரும் விரும்பினர். அதற்காக, குவாட் என்று அழைக்கப்படும் அமெரிக்கா, ஜப்பான், இந்தியா, ஆஸ்திரேலியா ஆகிய நான்கு நாடுகள் இணைந்த அமைப்பை அபேயும், பிரதமர் மோடியும் முனைப்புடன் முன்னெடுத்தனர். இந்த அமைப்பு ஒரு சர்வ தேச அமைப்பு. கடல்வழி வணிகம், வர்த்தகம், பாதுகாப்புத் துறை ஆகியவற்றில் மிக நீண்ட தொலைநோக்குப் பார்வையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

ஷின்ஸோ அபே, இருமுறை தனது பிரதமர் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார். இரண்டாவது முறை அரசுப் பணிகளிலிருந்து ஓய்வு பெறுவதாகக் கூறி, பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். இப்படி ஒரு பௌத்த துறவியைப் போல நீண்ட பதவிக்காலம் வாய்ப்பு இருந்தும், பதவி வேண்டாம் என்பதிலும் அபே முன்னிலை வகிக்கிறார்.

இவர் பிரதமராக இருந்த காலத்தில், ஜப்பான் நாட்டின் அப்போதைய சக்கரவர்த்தி அகிஹிட்டோ ஓய்வு பெற விரும்பி, பதவியை விட்டு விலகவும், அதன் பிறகு அவரது மகன் நருஹிட்டோ சக்கரவர்த்தியாக தேர்ந்தெடுக்கப்படுவதுமான ஒரு சரித்திரக் கட்டத்தையும் ஜப்பான் பார்த்தது. அபேயின் குடும்பத்தினர் பிரபல அரசியல் குடும்பமாக விளங்கினர். ஆனாலும், அபே மீது எந்த ஒரு குற்றச்சாட்டும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பான் நாட்டைச் சுற்றி இப்போது வடகொரியாவின் ராணுவ ஆதிக்கம், ஏவுகணைகள், அணு ஆயுதங்கள் குவிப்பு போன்ற நடவடிக்கையாலும், பொருளாதார ராணுவ வளத்தால் உலகின் இரண்டாவது வல்லரசாக சீனா இயங்கிக் கொண்டிருக்கும் சூழ்நிலையில், அமெரிக்கா, தென்கொரியா, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுடன் இணைந்து, ஒரு அமைதியான சூழ்நிலையை முன்னெடுத்து செல்வதில் ஷின்ஸோ அபே முன்னிலை வகித்தார்.

அபே மருத்துவத் துறையில் ஜப்பான் முன்னிலை வகிப்பதற்கும் அந்த நாட்டின் ஆராய்ச்சிக்கும் தகுந்த ஊக்கமளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உலகின் பல நாடுகளில் உள்ள தலைவர்கள் பலரும் ஷின்ஸோ அபேயின் மறைவிற்கு தங்கள் நாட்டின் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட அபரிமித அன்பும், அனுதாபமும், ஆதரவும் ஷின்ஸோ அபேக்கு மட்டும்தான் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. உலக நாடுகளின் தலைவர்கள் வரிசையில் அபே பங்கு பெற்றது, நம் ஆசிய நாடுகள் அனைத்திற் கும் பெருமை அளிப் பதாகும்.

நேற்று (ஜூலை 12, 2022) ஷின்ஸோ அபேயின் உடல் அடக்கம் ஜப்பானில் நடைபெற்றது. அவர் மறைவுக்கு நம்முடைய ஆழ்ந்த துக்கத்தையும், அனுதாபத்தையும் தெரிவித்து, அவருக்குப் புகழஞ்சலி செலுத்துவோம்.

(கட்டுரையாளர்: முன்னாள் தலைவர், இந்தோ ஜப்பான் வர்த்தக சபை.)

# ஜூலை 9 வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரும் அரசியல் மாற்றத்துக்கான உத்தரவாதம் இல்லை





**கலாநிதி ஜெகான் பெரேரா**

இலங்கை வரலாற்றில் முன்னென்றும் இல்லாத வகையிலான ஜூலை 9 கொந்தளிப்பான நிகழ்வுகளுக்கு பிறகு சஞ்சலமான ஒரு அமைதி நிலவுகிறது. ஜனாதிபதி செயலகமும் ஜனாதிபதி மாளிகையும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையும் ஆட்சியாளர்களின் கைகளில் இல்லை, பதிலாக மக்களின் கைகளில் இருக்கின்றன. இந்த அரச கட்டிடங்களை ஆக்கிரமித்திருக்கும் "அறகலய" போராட்டக்காரர்கள் அங்கு அரச உடைமைகளை பாதுகாப்பதற்காக நிலைவைக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு படைகளுடன் சகவாழ்வு நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அரசின் பிரதிபலிப்பு கடுமையானதாக இருக்காது என்று ஜூலை 9 ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றவர்கள் உண்மையில் ஒரு நம்பிக்கை இருந்தது. பாதுகாப்பு படைகளும் மதிக்கக்கூடிய தேசிய இலட்சியம் ஒன்றின் அங்கமாகவே ஆர்ப்பாட்டங்களில் தாங்கள் பங்கேற்பதாக அவர்கள் உணர்ந்தார்கள்.

திட்டமிடப்பட்ட ஆர்ப்பாட்டங்களை முறியடிக்க சட்டமுறைமையைப் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் பயன்தராமல் போனதனால் இந்த நம்பிக்கை ஏற்பட்டிருக்கக் கூடும். ஆர்ப்பாட்டங்களின் பரப்பெல்லைகளை கட்டுப்படுத்துவதற்கு பொலிசார் கோரிய அனுமதியை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. பொலிசார் தங்களது அடுத்த தெரிவாக கொழும்பு மாவட்டத்திலும் சுற்றுப்புறங்களிலும் ஊரடங்கைப் பிறப்பித்தார்கள். அதுவும் கூட பயன்தரவில்லை. பொலிஸ் ஊரடங்கு சட்டவிரோதமானது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உடனடியாகவே வாதிட்டது. அதை ஏற்றுக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழு நேரடியான வழிவகைகளின் ஊடாக ஆர்ப்பாட்டங்களை கட்டுப்படுத்த முயற்சித்த பொலிஸ் அது சரிவராமல் போகவே ஊரடங்கை பிறப்பித்து மறைமுகமான வழிவகைகளின் ஊடாக முயற்சித்து பார்க்கிறது என்று சுட்டிக்காட்டியது. எது எவ்வாறிருந்தாலும், ஆர்ப்பாட்டக்காரர்கள் எவருடனும் சண்டையிடாமல், மற்றையவர்களின் உரிமைகளையும் மதித்து பெருமளவுக்கு முன்னுதாரணமான முறையில் நடந்துகொண்டார்கள்.

நாட்டின் சகல பாகங்களிலும் இருந்துவந்த இலட்சக்கணக்கான மக்கள் கொழும்பிலும் கடந்த நான்கு மாதங்களாக அரசாங்கத்துக்கெதிரான பிரதான போராட்டக்களமாக விளங்கும் காலிமுகத்திடலிலும் திரண்டு சனிக்கிழமை போராட்டத்தை தொடங்கினார்கள். பொதுப்போக்குவரத்து இல்லாத கஷ்டமான சூழ்நிலையில் காலவரையறையற்ற ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டிருந்ததற்கு மத்தியில் இரவோடிரவாக தற்காலிக போக்குவரத்து ஏற்பாடுகள் மூலமாகவும் நடையாகவும் மக்கள் கொழும்பை வந்தடைந்தார்கள். ஆனால் காலையில் பொலிஸ் ஊரடங்கு நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. ஐரோப்பா உட்பட உலகின் பல பாகங்களிலும் ஆர்ப்பாட்டங்களுக்காக ஆயிரக்கணக்கில் மக்கள் திரளும்போது குடிவெறியில் கலகங்களும் சூறையாடல்களும் இடம்பெறுவதை ஊடகங்கள் மூலமாக நாம் அறிந்திருக்கிறோம். அதற்கு முற்றிலும் வேறுபட்ட முறையில் அன்றைய தினம் கொழும்பில் அமைதியான முறையில் கூடியதை காணக்கூடியதாக இருந்தது.

**கொண்டாட்ட சூழ்நிலை**

வெளியிடங்களில் இருந்து கொழும்புக்கு மக்கள் இடர்பாடுகளுக்கு மத்தியில் பயணம் செய்த உடல் உபாதைக்கு மத்தியிலும் பெரும்பாலும் அன்றைய தினம் காலையில் மக்கள் மத்தியில் கொண்டாட்ட சூழ்நிலை காணப்பட்டது. சக்கர நாற்காலிகளில் வயோதிபர்கள், பெற்றோர் தூக்கி வைத்திருக்கும் குழந்தைகள், விவசாயிகள், தொழிலாளர்கள் என்று பலதரப்பு மக்களும் தேசியக்கொடியை ஏந்தியவண்ணம் போராட்டக்களத்துக்கு அமைதியாக வந்து சேர்ந்தனர். மே 9 பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்சவை விலகச் செய்த போராட்டங்களின் ஆரம்ப நாட்கள் போன்று நிலைமை இருந்தது. மாற்றம் ஒன்றும் ஏற்படாத நிலையில் அண்மைய வாரங்களாக போராட்டங்களில் மக்கள் எண்ணிக்கையில் வீழ்ச்சி இருந்தது. ஆனால் சனிக்கிழமை நிலைமை மாறியது. கோட்டா வீட்டுக்குப் போ என்ற பொதுவான சுலோகத்துக்கு மத்தியில் வேறு சுலோகங்களும் காணப்பட்டன. ஜனாதிபதி கோதாபய பதவி விலகும் தீர்மானத்தை முன்கூட்டியே எடுத்து கௌரவமான முறையில் வெளியேறியிருந்தால் ஜனாதிபதி மாளிகை முற்றுகையை தவிர்த்திருக்கமுடியும்.

அதற்கு பிறகே ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் மற்றும் அலரிமாளிகை முற்றுகை இடம்பெற்றது. கண்ணீர்புகைக்குண்டு பிரயோகம் இடம்பெற்றது. வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்யப்பட்டது. இதில் சிலர் கடுமையாக காயமடைந்தனர். ஆனால் இத்தகைய தாக்குதல்களினால் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் முன்னரங்கத்தில் நின்ற போராட்டக்காரர்களின் உத்வேகத்தை தடுக்கமுடியவில்லை. ஜனாதிபதி மாளிகையின் வாயிறக்கதவுகள் முன்பாக ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். இறுதியில் பாதுகாப்பு படையினர் பின்வாங்கவேண்டியேற்பட்டது. மதில்களால் ஏறிக் குதித்த மக்கள் மாளிகையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நாட்டின் ஆட்சியாளர்கள் அனுபவித்த வரப்பிரசாதங்களையும் ஆடம்பரங்களையும் பார்த்து வியப்படைந்தனர். அவற்றையெல்லாம் வீடியோ எடுத்த மக்கள் நீச்சல் குளத்தில் குதித்து மகிழ்ந்தனர்.

அடுத்தது என்ன என்பதே கேள்வி. தேசிய மட்டத்தில் ஊழல் இல்லாததும் சட்டத்தின் ஆட்சியை மதிக்கின்றதுமான அர்த்தமுடைய அரசியல் மாற்றம் ஒன்றுக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய பக்கச்சார்பற்றவர்களின் அமைதிவழிப் போராட்டமாகவே அறகலய தொடரவேண்டியது அவசியமாகும். தற்போதைய சகதியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அரசியல் உறுதிப்பாடும் பொருளாதாரத் திட்டமும் தேவை. ஆனால், அரசாங்கத்திற்குள் உட்பூசல்கள் நிறைந்துள்ளன. எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு சர்வதேச சமூகம் ஆதரவாக இல்லை. விலைவாசி அதிகரித்துக்கொண்டே போகிறது. எரிபொருட்கள், மருந்து வகைகள், உணவு மற்றும் டொலர்களுக்கான தட்டுப்பாடு தொடருகிறது. எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்னால் மக்கள் மைல் கணக்கால் வரிசையில் இரவுபகலாக காத்துக்கிடக்கிறார்கள். இந்த அத்தியாவசிய தேவைகள் தொடர்பில் சர்வதேச நாணய நிதியமும் நேச நாடுகளின் அரசாங்கங்களும் நிபந்தனையுடனான ஆதரவையே தர முன்வருகின்றன. மகிந்த ராஜபக்ச பிரதமர் பதவியில் இருந்து விலகியதையடுத்து அந்த பொறுப்பை விக்கிரமசிங்க கையேற்று இரு மாதங்கள் கடந்த பின்னரும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளைக் காணவில்லை.

ஜூலை 9 பிரமாண்டமான மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரும் அரசியல் மாற்றத்துக்கான உத்தரவாதம் இன்னமும் இல்லை. ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, பிரதமரின் அலரிமாளிகை எல்லாம் போராட்டக்காரர்களின் ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கிறது. ஜனாதிபதியும் பிரதமரும் பதவியில் இருந்து இறங்கும் வரை போராட்டக்காரர்கள் அந்த கட்டிடங்களில் தொடர்ந்தும் தங்கியிருக்க உத்தேசித்திருக்கிறார்கள். ஜனாதிபதி ஜூலை 13 பதவிவிலகுவதாக அறிவித்திருக்கிறார் என்று பாராளுமன்ற சபாநாயகர் தெரிவித்தார். பிரதமரும் பதவிவிலகுவதாக அறிவித்திருக்கிறார், ஆனால் ஒரு நிபந்தனையுடன். அவர்கள் உண்மையில் பதவி விலகுவார்களா என்ற கேள்விக்கு காலம்தான் பதில் சொல்லும். ஜனாதிபதி உள்நாட்டில் இருக்கிறாரா அல்லது வெளிநாட்டில் இருக்கிறாரா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால் சமையல் எரிவாயு தட்டுப்பாட்டை நீக்குவதற்கு முக்கியமான தீர்மானங்களை அவர் எடுக்கிறார் என்று அவரது அலுவலகம் அறிவித்திருக்கிறது. பதவிகளில் இருந்து விலகுவதில் ஜனாதிபதியினதும் பிரதமரினதும் பற்றுறுதி குறித்த குழப்பத்தன்மை காரணமாக சஞ்சலமான அமைதியொன்று நிலவுகிறது.


சாத்தியமானளவு விரைவாக தேர்தல்களை நடத்துவதே ஒரே வழி. தேசியத் தேர்தல்களை மாத்திரமல்ல மூன்று வருடங்களுக்கும் அதிகமான காலமாக பின்போடப்பட்டிருக்கும் மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்தவேண்டும். வளர்ச்சிப் பொருளாதாரத்தை நோக்கிய கடுமையான மாற்றத்துக்கு இலங்கை நகரவேண்டுமென்றால் மக்கள் நம்பிக்கை வைக்கக்கூடிய மட்டங்களிலான அரசாங்கங்கள் நாட்டின் சகல பாகங்களிலும் தேவை. ஆட்சி செய்பவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையில் நம்பிக்கை இல்லாத நிலையில் இலங்கை மேலும் சகதிக்குள் மூழ்கக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதனால் நடவடிக்கைகளில் அவசரம் தேவை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட வாசஸ்தலம் இரவு வேளையில் தீவைக்கப்பட்ட சம்பவத்தை சுற்றியுள்ள சர்ச்சை வெறுப்பு நிறைந்த அரசியலின் வெளிப்பாடாகும். இந்த வெறுப்பு அரசியலில் இருந்து நாடு விடுபடவேண்டியது அவசியமாகும். பிரதமரின் வாசஸ்தலத்துக்கு அண்மையாக பாதுகாப்பு படையினரால் ஊடகவியலாளர்கள் தாக்குதலுக்குள்ளான சம்பவத்தின் கொடூரம் காணொளிகளில் பதிவாகியிருக்கிறது. மீண்டும் அத்தகைய சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு உடனடி நடவடிக்கைகள் அவசியம்.

இத்தகைய பின்புலத்தில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் போன்ற செல்வாக்குமிக்க சிவில் அமைப்புக்கள் ஆட்சிமுறையில் மக்கள் மீண்டும் நம்பிக்கை வைப்பதை உறுதிப்படுத்த பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் உள்ளடக்கிய அரசாங்கம் ஒன்று அமைக்கப்படவேண்டும் என்றும் அடுத்து விரைவாக தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்றும் யோசனைகளை முன்வைத்திருக்கின்றன. இவை நியாயமானவை. ஏனென்றால் கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் பாராளுமன்றத் தேர்தலிலும் மக்களால் வழங்கப்பட்ட ஆணைகள் வாபஸ் பெறப்பட்டுவிட்டன. அந்த மக்கள்தான் அறகலய போராட்டத்தை ஆதரித்து இன்று அரசாங்க மாளிகைகளை ஆக்கிரமித்திருக்கிறார்கள். ஜனாதிபதியுடன் சேர்ந்து 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் வீட்டுக்கு போகவேண்டும் என்பது மக்களின் இரண்டாவது கோரிக்கை. இத்தகைய சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளின் தலைவர்களும் ஆசனங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் அன்றி கட்சிகள் என்ற வகையில் அவர்களின் பிரதிநித்துவ அடிப்படையில் இடைக்கால அரசாங்கம் ஒனறை அமைப்பதே சிறந்தவழியாக இருக்கக்கூடும். அரசியல்சாராத ஒரு தெரிவு என்றவகையில், சட்டத்தரணிகள் சங்கம் போன்ற சுயாதீனமானதும் மதிப்புக்குரியதுமான சிவில் நிறுவனம் காபந்து அரசாங்கத்தின் தலைமையைப் பொறுப்பேற்கக்கூடியதான ஒரு ஏற்பாடு குறித்தும் ஆராயலாம்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**18)** 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

**19)**  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..........................................

**20)** தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

**21)** | 3, 9, 14, 6, 10, 12, | பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................................

**22)** ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

................................................................................

**23)** ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

............................................................

**24)** பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3*l* 300*ml* பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...........................................................

**25)** 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ..................................................

**26)** **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

**27)** கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

....................................................

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

**28)** 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?



....................................................

**29)** ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

....................................................    (30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**30)** சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)     2)     3) 

**31)** வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி    2) இரணைமடுக்குளம்    3) பராக்கிரமபாகு சமுத்திரம்

**32)** உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட்ட எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம்    2) உதிப்பு    3) உடலைத் தளர்த்தல்

**33)** தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன்    2) வாளேந்திய சிங்கம்    3) நெற்கதிர்

**34)** பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976    2) 1851    3) 1815

**35)** வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு    2) இறப்பர், தாழம்பூ    3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

**18.** 1) 6  2) 8    **19.** $\frac{3}{10}$
**20.** 1) 128, 130    2) 9, 6
**21.** 3, 6, 9, 12
**22.** 745    **23.** 455
**24.** 11100ml / 1100ml    **25.** ரூபாய் 144.00
**26.** 1) 190  2) 100  3) 290
**27.** 15 : 30    **28.** 5m 50cm / 550cm
**29.** 36 பூக்கள்
**30.** 1    **31.** 2    **32.** 3
**33.** 2    **34.** 3    **35.** 2

### கல்வி tv CHANNEL-1

**13.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

### கல்வி tv CHANNEL - 2

**13.07.2022**
**புதன்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# ஓட்டமாவடி பிரதேச செயலக பணியாளர்கள் இரத்ததானம்



மட்டக்களப்பு, ஜூலை. 13

ஓட்டமாவடி பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் இரத்த தான முகாம் செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தலைமையில் நடைபெற்ற இரத்ததான முகாமில் செயலகமக்களும் உத்தியோகத்தர்களும், பிரதேச கலந்து கொண்டு இரத்த தானத்தினை வழங்கினார்.

இதான்போது மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கி வைத்தியர் ரி.தவனேசன் தலைமையிலான, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவு உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு இரத்த தானத்தினை திறம்பட மேற்கொண்டனர்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி பிரிவில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை ஓளரவு நிவர்த்தி செய்யும் வகையில் செயலக உத்தியோகத்தர்களும், பிரதேச மக்கள் மூலம் இரத்த தானம் வழங்கி வைக்கப்பட்டதாக ஓட்டமாவடி பிரதேச செயலாளர் வீ.தவராஜா தெரிவித்தார். (அ)

# சர்வகட்சி ஆட்சிமுறை வேண்டாம் மக்கள் விரும்பும் ஆட்சியே தேவை

## மட்டக்களப்பில் ஜே.வி.பி. போராட்டம்

மட்டக்களப்பு, ஜூலை. 13

**சர்வகட்சி ஆட்சி முறை வேண்டாம் மக்கள் விரும்பும் ஆட்சி முறையை கோரி மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு முன்னால் ஜே.வி.பி கட்சி ஆதரவாளர்கள் ஆர்பபாட்டத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.**



ஜே.வி.பி கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் என்.சுந்தரேசன் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தையடுத்து, நேற்று முற்பகல் 10 மணிக்கு காந்தி பூங்காவுக்கு முன்னால் கட்சி ஆதரவாளர்கள் சிலர் ஒன்று கூடினர்.

இதனையடுத்து, ஊழலைத் தவிர நீங்கள் உருப்படியாக செய்தது என்ன, நாட்டை விற்று ஏப்பம் விட்ட கொள்ளையரை விரட்டியடிப்போம், திருடர்களை விரட்டியடிப்போம், உங்களுக்கு கொண்டாட்டம் மக்களுக்கு திண்டாட்டம், அரச நிறுவனங்ளை விற்பதை நிறுத்து, போராட் டத்தை நிறுத்தாமல் தொடரு வோம்,

மக்கள் ஆட்சிக்கு இடம் கொடு, மக்களை ஏமாற்றும் உளக்கு இந்த மண்ணில் இடம் எதற்கு? சர்வகட்சி அரசாங்கம் வேண்டாம் என்ற பல சுலோகங்கள் ஏந்தியவாறு கோசங்கள் எழுப்பியவாறு சுமார் அரை மணித்தியாலம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர். (அ)

# ரயர் வெடித்தமையால் வான் மின்கம்பத்தில் மோதி விபத்து



மட்டக்களப்பு, ஜூலை. 13

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் சென்றுகொண்டிருந்த வான் ரயர் வெடித்தமையால் பாதையை விட்டு விலகி மின்கம்பத்தில் மோதியது. இதனால் வானுக்கு பாரிய சேதம் எற்பட்டதுடன், மின் கம்பத்துக்கும் சேதம் ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற இந்த விபத்தின் போது வானிலிருந்து எயார் பாக் சரியாக இயங்கியதால் சாரதி உயிர் ஆபத்தின்றி தப்பினார்.

மேலும், காத் தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டம்



மட்டக்களப்பு, ஜூலை. 13

கடந்த 9ஆம் திகதி பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டுக்கு முன்பாக ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையை கண்டித்து காத்தான்குடியில் ஆர்ப்பாட்டமென்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் மாலை காத்தான்குடி குட்வின் சதுக்கத்தில் இடம்பெற்றது.

“வேண்டும் வேண்டும் சுதந்திரம் வேண்டும்”, “ஊடக சுதந்திரத்தை பறிக்காதே”, “அடிக்காதே அடிக்காதே ஊடகத்திற்கு அடிக்காதே”, “பிரதமர் இல்லத்தின் முன் தாக்கப்பட்ட நியூஸ் பெஸ்ட் ஊடகவியலாளருக்கு நீதி வேண்டும்”, “ஊடகத்தையும் உணர்வுகளையும் ஒடுக்க நினைக்காதே”, “ஜனநாயகத்தின் நான்காவது தூணை நசுக்க நினைக்காதே”, “ஊடக சுதந்திரத்தையும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்து“, “அரசே தாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வழங்கு” போன்ற வாசகங்கள் பொறித்த பதாதைகளை ஏந்தியவாறும், ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்தி, ஊடகவியலாளர்களுக்கு நீதியை பெற்றுக் கொடுக்கவேண்டும் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மணித்தியாலம் முன்னெடுக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் ஊடகவியலாளர்களும், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த தமிழ் ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பிரதேச செயலகங்களின் மட்டுப்படுத்திய சேவை

அம்பாறை, ஜூலை. 13

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் பற்றாக்குறை காரணமாக அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் பொது மக்களுக்கான சேவைகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன் தெரிவித்தார்.

உத்தியோகத்தர்களின் வரவுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு சுழற்சி முறையில் உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு பொதுமக்களுக்கான அத்தியாவசிய, அவசரத் தேவைகளுக்கான சேவைகள் வழங்கப் பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கிழக்கு மாகாண மோட்டார் வாகன திணைக்களத்தின் சேவைகள், மோட்டார் வாகன ஆணையாளர், பதிவாளர் திணைக்களம் போன்றவற்றின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும், அதற்கான நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேற்குறிப்பிட்ட சேவைகளை பெறுவதற்கான தூர இடங்களிலிருந்து வரும் பொது மக்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு தங்களுக்கான சேவைகளை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

பொதுமக்களின் நலன் கருதியும் அவர்களுக்குரிய சேவைகளை அசௌகரியம் இன்றி பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு ஏனைய சேவைகள் வழமை போன்று நடை பெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# எரிபொருள் கோரி கிண்ணியாவில் வைத்தியர்கள் நேற்று போராட்டம்

திருமலை, ஜூலை. 13

கிண்ணியா பிரதேச சுகாதார ஊழியர்கள் தங்களுக்கான எரிபொருளை கேட்டு, நேற்று கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிண்ணியா தள வைத்தியசாலை வைத்தியர்கள், சுகாதார ஊழியர்கள் மற்றும் கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக ஊழியர்கள் இந்த கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் இருந்து பேரணியாகச் சென்று, கிண்ணியா பிரதேச செயலகம் முன்பாக ஒன்று கூடி, தங்கள் எதிர்ப்பினை தெரிவித்தனர்.(அ)






# ஈரானிடமிருந்து ஆளில்லா டிரோன் விமானங்களை வாங்குகிறது ரஷ்யா

மொஸ்கோ, ஜூலை. 13
உக்ரைனுக்கு எதிரான போரில் பயன்படுத்த ஈரானிடம் இருந்து நூற்றுக்கணக்கான ஆளில்லா டிரோன் விமானங்களை ரஷ்யா வாங்குவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

வெள்ளை மாளிகையில் பேசிய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலிவென், ஆளில்லா விமானங்களை இயக்குவதற்கான பயிற்சியை ரஷ்ய படையினருக்கு இம்மாதமே கற்றுக்கொடுக்க ஈரான் தயாராகி வருவதாகவும் அதற்கான ஆதாரங்கள் அமெரிக்காவிடம் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (அ)

# இங்கிலாந்தில் வெயிலின் தாக்கத்தில் தீப்பற்றி எரிந்த ரயில்வே தண்டவாளம்



லண்டன், ஜூலை. 13
லண்டனில் கோடை வெயிலின் உஷ்ணத்தால் தண்டவாளங்களில் உராய்வு ஏற்பட்டு தீப்பற்றி எரிகிறது.

லண்டன் விக்டோரியா நகர் நோக்கி செல்லும் ரயில்வே தண்டவாளம் கடும் வெப்பத்தின் உஷ்ணத்தால் தானாக தீப் பற்றி எரியும் புகைப்படங்களை தென்கிழக்கு ரயில்வே நிர்வாக இயக்குநர் வெளியிட்டுள்ளார்.

கொளுத்தும் வெயிலின் உஷ்ணம் தாங்காமல் நீச்சல் குளங்கள், கடற்கரை, தண்ணீர் பூங்காக்கள் உள்ளிட்ட இடங்களை நோக்கி மக்கள் படையெடுத்து வருகின்றனர். (அ)

# ஆளும் கட்சி வெற்றிக்கு பங்களித்த ஷின்சோ அபேயின் அனுதாப வாக்கு!

## லிபரல் ஜனநாயக கட்சி அமோக வெற்றி



ரோக்கியோ, ஜூலை. 13
ஜப்பான் பாராளுமன்ற மேலவைத் தேர்தலில் ஆளும் கட்சிக் கூட்டணி அமோக வெற்றி பெற்றது.

இதன்மூலம் 2025 ஆம் ஆண்டு அடுத்த தேர்தல் வரை பிரதமர் புமியோ கிஷிடா அரசின் முடிவுகளை தடையின்றி நிறைவேற்றுவதற்கு ஊக்கம் கிடைத்துள்ளது.

குறைந்த அதிகாரம் கொண்ட ஜப்பான் பாராளுமன்ற மேலவைக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்தல் நடைபெற்றது. முன்னதாக, ஆளும் லிபரல் ஜனநாயக கட்சி வேட்பாளரை ஆதரித்து வெள்ளிக்கிழமை பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தபோது, முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே சுட்டுக் கொலப்பட்டது நாடு முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இருப்பினும் திட்டமிட்டபடி தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 52 சதவீத வாக்குகள் பதிவாகின. தேர்தல் முடிவுகள் ஞாயிற்றுக்கிழமை இரவில் வெளியாகின. இதில் மொத்தம் உள்ள 248 இடங்களில், ஆளும் லிபரல் ஜனநாயக கட்சிக் கூட்டணி 146 இடங்களைப் பெற்றது. அபே படுகொலை செய்யப்பட்டது ஆளும் கட்சிக் கூட்டணிக்கு அனுதாப வாக்குகளைப் பெற்றுத் தந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இந்த வெற்றி மூலம் தேசிய பாதுகாப்பு, “புதிய முதலாளித்துவ” பொருளாதாரக் கொள்கை போன்ற நீண்டகால கொள்கைகளில் பிரதமர் புமியோ கிஷிடா தடையின்றி பணியாற்றுவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்த வெற்றியை பிரதமர் கிஷிடா வரவேற்றுள்ளார். இருப்பினும் முன்னாள் பிரதமர் அபேவின் மறைவின் அதிர்ச்சியிலிருந்து அவர் மீளவில்லை. அவரும், மூத்த எம்.பி.க்களும் கட்சியின் தேர்தல் தலைமை அலுவலகத்தில், அபேவின் மறைவுக்கு மௌன அஞ்சலி செலுத்தினர். பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய கிஷிடா, “நாம் மாபெரும் தலைவரை இழந்திருக்கிறோம். அபேவின் நிறைவேறாத இலக்குகளை நிறைவேற்ற கட்சியின் ஒற்றுமை முக்கியமானது. கொரோனா, உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர், விலைவாசி உயர்வு போன்ற விடயங்களுக்கு முன்னுரிமை அளிப்பேன். நாட்டின் தேசிய பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கும், அரசியலமைப்புச் சட்டத்தை திருத்துவதற்கும் தொடர்ந்து குரல் கொடுப்பேன்’ -என்றார். (அ)

# பிறந்தநாள் கொண்டாட்டத்தின்போது பிரேசிலில் சுட்டுக் கொல்லப்பட்ட இடது சாரி கட்சித்தலைவர்

பிரேசிலியா, ஜூலை. 13
பிரேசிலில் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஈடுபட்ட இடது சாரி கட்சித் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்ட சி.சி.ரி.வி காட்சி வெளியாகி உள்ளது.

பரானா மாகாணத்தில் இடது சாரி கட்சி நிர்வாகி மார்செலோ அருடாவின் பிறந்த நாள் விழாவில் புகுந்த நபர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இரு தரப்பினர் இடையே நடந்த சரமாரி தாக்குதலில் மார்செலோ அருடா சுட்டுக் கொல்லப்பட்டார்.

காயமடைந்த நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் மீட்கப்பட்ட நிலையில் அவர், சிறைக் காவலர் என்றும், ஜனாதிபதி ஜெய்ர் போல்சனேரோவின் வலதுசாரி ஆதரவாளர் என்றும் கூறப்படுகிறது. (அ)

# பிரபஞ்சத்தின் முதல் படத்தை அனுப்பியது பிரமாண்ட ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி

நியூயோர்க், ஜூலை. 13
பூமியில் இருந்து 10 இலட்சம் மைல்கள் தொலைவில் நிலை நிறுத்தப்பட்டுள்ள ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி அங்கிருந்து பிரபஞ்சத்தை படம் பிடித்து அனுப்பி உள்ளது.

இதன் முதலாவது புகைப்படத்தை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நேற்று முன் தினம் இரவு வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில் அமெரிக்க துணை ஜனாதிபதி கமலா ஹரிஸ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மனித கண்களுக்கு புலப்படாத பகுதிகளையும் கதிர்வீச்சு ஊடுருவல் முறையில் ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி படம் பிடித்து அனுப்பி உள்ளது. இதன் மூலம், விண்வெளியில் ஆயிரக்கணக்கான பால்வெளி மண்டலங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

பூமியில் இருந்து 1,300 ஒலியாண்டுகள் தூரம் பயணம் செய்து இந்த படம் எடுக்கப்பட்டுள்ளதாக நாஸாவின் நிர்வாகி பில்நெல்சன் தெரிவித்துள்ளார்.

பிரபஞ்சத்தின் ஆழமான மற்றும் கூர்மையான அகச்சிவப்பு காட்சியை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி படம் பிடித்துள்ளது. அது நமக்கு கண்ணுக்கு தெரியாத விண்மீன் திறள்களை காட்டுகிறது. தொலைநோக்கி மூலம் எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு இன்று ஜூலை 12-ஆம் திகதி முழுமையாக வெளியிடப்படும் என நாஸா வெளியிட்டுள்ள ருவிட்டர் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாசாவின் இந்த சாதனை புகைப்படத்தை வெளியிட்ட ஜோ பைடன், விஞ்ஞானிகளை வெகுவாக பாராட்டினார்.

சிறிய அளவில் இருந்து தொலைநோக்கிகள் படிப்படியாக வளர்ந்து தற்போது உலகம் முழுக்க பல நாடுகளில் ராட்சத தொலைநோக்கிகள் உள்ளன. அதில் நாஸா அனுப்பிய விண்வெளி தொலைநோக்கியான ஹப்பிள் தொலைநோக்கிக்கு மிக முக்கிய இடம் இருந்தது.

1990இல் அனுப்பப்பட்ட இந்த தொலைநோக்கி விண்ணில் மிதக்கும் உலகின் பெரிய தொலைநோக்கி யாக இருந்தது. ஆனாலும், பல ஆண்டுகள் ஆனதாலும், இதன் பல்வேறு பாகங்கள் செயல் இழக்க தொடங்கியதாலும் புதிதாக ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி உருவாக்கப்பட்டது.



நாஸா மற்றும் ஐரோப்பா விண்வெளி ஆராய்ச்சி மையம் மற்றும் கனடா ஆராய்ச்சி மையம் இணைந்து இந்த ஜேம்ஸ் தொலைநோக்கியை உருவாக்கின. ஏரியன் வி.ஏ. 256 ரொக்கட் மூலம் இந்த தொலைநோக்கி கடந்த வருடம் டிசெம்பர் மாதம் விண்ணில் நிலைநிறுத்தப்பட்டது.

பல மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கும் நட்சத்திரம், கிரகங்கள், அண்டங்களை இதன் மூலம் ஆராய முடியும் என நாசா விஞ்ஞானிகள் நட்பிக்கை வெளியிட்டுள்ளனர். (அ)

# இலங்கையர்க்கு நன்றி; ஆஸி. வீரர்கள் உருக்கம்!




கொழும்பு, ஜூலை 13

தற்போது நிலவும் இக்கட்டான நிலையில் அவுஸ்திரேலிய அணியுடனான கிரிக்கெட் தொடரை நடத்திய மைக்காக அவுஸ்திரேலிய அணியின் வீரர் டேவிட் வோர்ணர் இலங்கையர்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

தனது இன்ஸ்ட்ராகிராம் பக்கத்தில் இது குறித்து கருத்துவெளிட்டுள்ள டேவிட் வோர்ணர்,

அவுஸ்திரேலிய அணி இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விருப்புடன் கிரிக்கெட் தொடரை விளையாடியமைக்கு நன்றி கூறுகின்றது. "உங்கள் அற்புதமான நாட்டைப் பற்றி நான் விரும்புவது என்னவெனில், நீங்கள் எந்த சூழ்நிலையிலும் சிரித்த முகத்துடனேயே இருப்பீர்கள். அத்துடன், உபசரிக்கும் நோக்கத்துடடேனேயே இருக்கின்றீர்கள்" என்று குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய அணியை இலங்கை அரவணைத் ததையும் இந்த கிரிக்கெட் சுற்றுப் பயணத்தையும் நாம் மறக்க மாட்டோம் - என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை, காலி கிரிக்கெட் மைதானத்துக்கு வெளியே இடம்பெற்ற அரச எதிர்ப்பு போராட் டங்களின் சத்தத்தில் இருந்து எம்மால் மீள முடியாதுள்ளது என்று அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

"இது ஓர் எதிர்ப்பிலிருந்து ஒரு கட்சியாக மாறும் போது நீங்கள் கேட்கலாம். ஹோட்டலில் உள்ள ஊழியர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சிலருடன் அரட்டை அடிப்பது, மக்களின் கஷ்டங்களை நாங்கள் உணர்கிறோம், அது மிகவும் கடினமானது," என்று அவர் மேலும் கூறினார். நாம், ஹோட்டல்களில் தங்கியிருக்கும் போது ஊழியர்கள், சாரதிகள் மற்றும் சிலருடன் பேசும் போது மக்களின் கஷ்டங்களை புரிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. அது மிகவும் கடினமானது என பட் கம்மின்ஸ் கூறியுள்ளார். (ஐ)




## சாதனையை தவறவிட்ட ரோஹித்!

லண்டன், ஜூலை 13

இங்கிலாந்துக்கு எதிராக அதன் சொந்த மண்ணில் இந்தியா இருபது -20 தொடரை கைப்பற்றியது. முதல் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற இந்திய அணி 3ஆவது போட்டியில் 17 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது.

ஏற்கனவே, தொடரை கைப்பற்றியதால் சோதனை முயற்சியாக 3ஆவது போட்டியில் புவனேஸ்வர் குமார், ஜஸ்பிரித் பும்ரா, ஹார்திக் பாண்ட்யா போன்ற முக்கிய வீரர்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டு இளம் பந்துவீச்சாளர்களுக்கு ரோஹித் சர்மா வாய்ப்பளித்தார். இதில் இந்தியா தோல்வியடைந்தது.

ரோஹித் சர்மா அணித் தலைவராகப் பொறுப்பேற்ற பின்னர் தொடர்ச்சியாக 14 வெற்றிகளை பதிவு செய்து உலக சாதனை படைத்த ரோஹித் சர்மா அவர் இறுதியாக வழிநடத்திய 19 போட்டிகளில் தொடர் வெற்றியை அணிக்குப் பெற்றுக் கொடுத்தார்.

ஆனால், இங்கிலாந்துடனான மூன்றாவது போட்டியை அவர் வென்றிருந்தால் சர்வதேச கிரிக்கெட்டில் அதிக தொடர் வெற்றிகளைப் பெற்ற அணித் தலைவர் என்ற பெருமையை ரோஹித் சர்மா சமன் செய்திருப்பார்.

அவுஸ்திரேலியாவின் அணித் தலைவர் றிக்கி பொண்டிங் 20 தொடர் வெற்றிகளுடன் இந்த சாதனையை தொடர்ந்தும் தக்கவைத்துள்ளார்.




## தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இங்கிலாந்து

லண்டன், ஜூலை 13

தென்னாபிரிக்கா அணியை 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது இங்கிலாந்து அணி.

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா மகளிர் அணிகளுக்கு இடையேயான முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணி துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. இதன்படி ஆடிய தென்னாபிரிக்கா அணி அனைத்து விக்கெட்களையும் இழந்து 218 ஓட்டங்களை எடுத்தது.

அதிகபட்சமாக சி ட்ரையான் 88 ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கிலாந்து அணி தரப்பில் நடாலி ஸ்கிவர் 4 விக்கெட்களை கைப்பற்றினார்.

இதனையடுத்து 219 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணி களமிறங்கியது.

தொடக்க வீராங்கனைகளாக டாமி பியூமண்ட்-லம்ப் ஜோடி களமிறங்கியது. ஓர் ஓட்டம் எடுத்த நிலையில் டாமி பியூமண்ட் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த சோபியா டங்க்லி 22 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினர்.

லம்ப் - நடாலி ஸ்கிவர் ஜோடி நிதானமாக விளையாடி ஓட்டங்களை சேர்த்தனர். நடாலி ஸ்கிவர் 55 ஓட்டங்கள் எடுத்த போது விக்கெட்டை பறிகொடுத்தார்.

ஒரு பக்கம் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தொடக்க வீராங்கனை லம்ப் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட்டில் தனது முதல் சதத்தை பதிவு செய்தார். அவர் 102 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் இங்கிலாந்து பெண்கள் அணி 32.1 ஓவரில் 219 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதனால் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து அணி முன்னிலையில் உள்ளது. (ஐ)

## ஐ. சி. சியின் சிறந்த வீரர் ஜொனி பெயர்ஸ்ரோ தெரிவு!

டுபாய், ஜூலை 13

நியூசிலாந்துக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் ஜொனி பெயர்ஸ்ரோ தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக விளையாடும் வீரர்களை கௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு மாதத்திலும் சிறப்பாக விளையாடிய சிறந்த வீரரை ஐ. சி. சி. அறிவித்து வருகின்றது.

இந்த வகையில் கடந்த ஜூன் மாதத்துக்கான சிறந்த வீரர் யார் என்பதை அடையாளம் காண்பதற்கான வீரர், வீராங்கனைகள் பெயர்களை ஐ. சி. சி. பரிந்துரைத்தது.

இந்தப் பட்டியலில் ஜொனி பெயர்ஸ்ரோ, டரில் மிற்செல், ஜோ ரூட் ஆகியோர் பெயர்கள் பரிந்துரைக் கப்பட்டன. இதில் கடந்த மாதம் நியூசிலாந்துக்கு எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியதன் மூலம் பெயர்ஸ்ரோ சிறந்த வீரராக தெரிவானார்.

சிறந்த வீராங்கனைக்கான விருதை தென்னாபிரிக்காவின் மரிசான் கேப் தட்டி சென்றார். (ஐ)




## முதல் ஒருநாள் போட்டி; கோலி பங்கேற்கவில்லை!




லண்டன், ஜூலை 13

இங்கிலாந்துக்கு எதிராக நேற்று ஆரம்பமான ஒரு நாள் தொடரின் முதல் போட்டியில் இந்தியாவின் நட்சத்திர வீரர் விராட் கோலி விளையாடவில்லை.

ரோஹித் சர்மா தலைமையிலான இந்திய அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.

இரு அணிகளும் மோதிய 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரை 2-1 என்ற கணக்கில் இந்தியா கைப்பற்றியது.

இதையடுத்து இந்தியா - இங்கிலாந்து அணிகள் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடுகின்றன. இந்தத் தொடர் நேற்று ஆரம்பமானது.

இந்நிலையில், முதல் போட்டியிலிருந்து விராட் கோலி விலகினார். அவருக்கு இடுப்பில் ஏற்பட்ட காயம் காரணமாகவே இந்தப் போட்டியில் பங்கேற்கவில்லை.

# அலரி மாளிகையில் பொருட்கள் திருட்டு

## பொலிஸில் முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 13

**அலரிமாளிகையில் பல்வேறு பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகக் கூறி கொள்ளுப்பிட்டி பொலிஸில் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

அலரிமாளிகை ஊழியர்களே இந்த முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநேரம், அலரிமாளிகையில் இருந்து சில உபகரணங்களும் திருடப்பட்டுள்ளதாக அலரி மாளிகையின் ஊடகப் பிரிவு முறையிட்டுள்ளது.

எவ்வாறாயினும் போராட்டக்காரர்கள் தொடர்ந்தும் அலரிமாளிகையை ஆக்கிரமித்து வருவதால், அலரி மாளிகை வளாகத்தில் இருந்து என்னென்ன பொருட்கள் திருடப்பட்டன என்பதை அறிய முடியவில்லை என கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அலரிமாளிகையில் பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாகவும் பல சொத்துக்களும் சேதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர். (அ)

# தென்மாகாண ஆளுநர் இராஜினாமா!

கொழும்பு, ஜூலை 13

தென்மாகாண ஆளுநர் பேராசிரியர் விலி கமகே நேற்று ஆளுநர் பதவியில் இருந்து இராஜினாமா செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்ய தீர்மானித்ததையடுத்து, தானும் ஆளுநர் பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளதாக விலி கமகே குறிப்பிட்டார். (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு 10 - 04 - 1968

உதிர்வு 08 - 07 - 2022

### சிவஞானம் மோகனராஜா (மோகன்)

யாழ். உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Oberndorf ஐ வதிவிடமாகவும் கொண்ட சிவஞானம் மோகனராஜா அவர்கள் 08.07.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை இரத்தினம் தம்பதிகள், காலஞ்சென்றவர்களான சண்முகநாதன் யோகம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற சிவஞானம், கமலாம்பிகை (ஜேர்மனி) தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தனிநாயகம், இராஜேஸ்வரி(இலங்கை) தம்பதிகளின் அன்பு மருமகனும், அருளினி அவர்களின் பாசமிகு கணவரும், அஸ்வன், அஸ்வினி, மயூரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கலாறஜனி(சுவிஸ்), சுபாஜினி(லண்டன்), நந்தகோபால்(கண்ணன் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சதீஸ்குமார், வரதராஜ், வானதி, திகழ்மதி, ரஜீவ், லோகநாதன், தமிழ்வாணன், தவறஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும், கோபு, இரவீந்திரன், துஷ்யந்தி, கௌரிகா ஆகியோரின் அன்புச் சகலையும், கௌசிகா, தர்சிகா, கௌதமன், கீர்த்திகா, கபிலன், நேமிகா ஆகியோரின் அன்பு மாமனாரும், சபரீசன், ஆரூரன், அசாரன், கரினிகா, கரீஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், வர்ணன், வராகன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

பார்வைக்கு
Thursday, 14 Jul 2022 4:00 PM - 9:00 PM
Bestattungshaus Dölker e.K. Werkstraße 24, 78727 Oberndorf am Neckar, Germany

கிரியை
Sunday, 17 Jul 2022 10:00 AM - 1:00 PM
Bestattungshaus Dölker e.K. Werkstraße 24, 78727 Oberndorf am Neckar, Germany

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**அஸ்வன் - மகன்** Mobile : +491734806730
**அருளினி - மனைவி** Mobile : +491628634534
**கண்ணன் - சகோதரன்** Mobile : +4917624855006
**கலா - சகோதரி** Mobile : +41766814961
**வானதி - மைத்துனி** Mobile : +447411641863
**திகழ்மதி - மைத்துனி** Mobile : +94772738019
**ரஜீவ் - மச்சான்** Mobile : +94775378859
**ராஜ் - மச்சான்** Mobile : +94772041032

தகவல்:
**கண்ணன் - சகோதரன்.**

# பிரதமர் ரணில் அதிகாரங்களை உடனே பயன்படுத்தவேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 13

நிலைமைகள் மேலும் மோசமடைவதை தடுக்கும் வகையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தனக்கிருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

அமைச்சரவை கூட்டம் நேற்று நடைபெறாத நிலையில் இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்கான கொடுப்பனவுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ள முடியாமல் இருக்கின்றமை தொடர்பாக, நேற்று முன் தினம் சபாநாயகர் தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஏற்கனவே எரிபொருளுக்காக மக்கள் நாள் கணக்கில் வீதியில் நிற்கின்ற நிலையில், கிடைக்கின்ற எரிபொருளையும் தாமதப்படுத்தும் வகையில் செயற்பாடுகள் அமையுமாயின், மின்வெட்டு உட்பட்ட பல மோசமான விளைவுகளை நாடு எதிர்கொள்ள நேரிடும்.

தற்போதைய நிலையில் நாட்டின் நலன் கருதி அமைச்சரவையின் ஒத்துழைப்புடன், பிரதமர் விடயங்களை கையாள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (அ)

## மரண அறிவித்தல்



மலர்வு 18 - 07 - 1948

உதிர்வு 11 - 07 - 2022

### பொன்னையா மகாதேவன்

யாழ். புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், யாழ். வண்ணார்பண்ணையை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா மகாதேவன் அவர்கள் 11.07.2022 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற பொன்னையா, மரகதம் தம்பதிகளின் ஏக புதல்வரும், காலஞ்சென்ற கந்தையா, நல்லம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கந்தையா, பரமனாட்சி தம்பதிகளின் பெறாமகனும், பவானி(சோதி) அவர்களின் ஆருயிர் கணவரும், துஷ்யந்தி(துளசி-கனடா), குமுதினி(கனடா), ஜீவஹாசன் (B.sc Hons Information technology மொறட்டுவப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மரூபன்(காண்டீபன் - கனடா), ஜெனார்த்தனன்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெனிஸ், ஜெசான், ஜெஸ்வின், ஹரிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, புவனேஸ்வரி மற்றும் பரமேஸ்வரன், விக்கினேஸ்வரன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும், புஸ்பவதி (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான திருலோகநாதன், அருணகிரிநாதன் மற்றும் சரோஜினிதேவி, கருணாவதி, சர்வலோக நாதன்(ஜேர்மனி), வைத்தீஸ்வரன்(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை, மகேஸ்வரி மற்றும் ஜெகநாதன், ராதாலட்சுமி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 13.07.2022 புதன்கிழமை அன்று மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் யாழ்ப்பாணம் கோம்பயன் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல 73.B.A தம்பிலேன்,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
**ஜீவஹாசன் - மகன்.**

தொடர்புகளுக்கு:
**சோதி - மனைவி** Mobile : +94773926839
**ஜீவஹாசன் - மகன்** Mobile : +94773835227
**துளசி - மகள்** Mobile : +16475012464
**காண்டீபன் - மருமகன்** Mobile : +14169704189
**குமுதினி - மகள்** Mobile : +15145897249
**ஜெனார்த்தனன் - மருமகன்** Mobile : +15147437952

## கோட்டா வீசா...

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு தப்பியோட முயல்கிறார் என்று நேற்று தகவல்கள் வெளியாகியிருந்தன. அவரின் இந்த முயற்சிகள் நடைமுறை சிக்கல்கள் காரணமாக கைகூடவில்லை.

இந்நிலையிலேயே கோட்டாபயவின் 'வீசா' கோரிக்கையை அமெரிக்கா நிராகரித்துள்ளது என்று உயர் அதிகாரி ஒருவரை மூலமாகக் கொண்டு 'தி இந்து' (ஆங்கிலம்) செய்தி வெளியிட்டுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷ முன்னர் அமெரிக்காவின் இரட்டை குடியுரிமையை கொண்டிருந்தார். 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்காக அவர் அமெரிக்க குடியுரிமையை துறந்திருந்தார். இதைத் தொடர்ந்து, தேர்தலில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்று ஜனாதிபதியாகத் தெரிவானார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அவரை பதவி விலகுமாறு மக்கள் பெரும் போராட்டங்களை முன்னெடுத்தனர். கடந்த சனிக்கிழமை அவரை பதவி விலகுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி மாளிகையை போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டனர். முற்றுகைப் போராட்டம் குறித்து தகவல் அறிந்ததையடுத்து அவர் அங்கிருந்து தப்பியோடினார். இதைத் தொடர்ந்து தனது விலகலையும் அறிவித்தார்.

இந்நிலையிலேயே, பாதுகாப்புக்காக அமெரிக்காவிடம் அவர் தஞ்சக் கோரிக்கையை முன்வைத்திருந்தார் என்றும், அவரின் அந்தக் கோரிக்கையை அந்த நாடு நிராகரித்து விட்டது எனவும் தெரிய வருகின்றது. எது எப்படி இருப்பினும், இந்தத் தகவலை உறுதிப்படுத்தும் விதமான பதில் அளிப்பதற்கு அமெரிக்க தூதரகம் மறுத்துவிட்டது.

இதேசமயம், இன்று ஜனாதிபதி பதவியிலிருந்து விலகும் கோட்டாபய ராஜபக்ஷ எங்கிருக்கிறார் என்று தெரியாத நிலை காணப்படுகின்றது. இதனிடையே விமான நிலையம் ஊடாக வெளியேற முயன்றார் என்றும், கொழும்பில் சிக்கியுள்ளார் என்றும் ஏ.எவ்.பி. செய்தி சேவை தெரிவித்துள்ளது. இந்நிலையில், நாட்டை விட்டு வெளியேற அவர் மாற்றுவழிகளை ஆராய்ந்துவருகிறார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விமான...

வும் அவரது மனைவியும் சர்வதேச விமான நிலையத்துக்கு அடுத்துள்ள இராணுவத் தளத்தில் நேற்று முன் தினம் இரவைக் கழித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று புதன்கிழமை பதவி விலகுவதாகவும், அமைதியான அதிகார மாற்றத்திற்கான வழியை தெளிவுபடுத்துவதாகவும் ஏற்கனவே அவர் உறுதியளித்துள்ளார்.

எனினும், தப்பிச்செல்லும்போது தமது சொந்த நாட்டிலேயே சிக்கியுள்ளதாக ஏ.எப்.பி குறிப்பிட்டுள்ளது.

73 வயதான ஜனாதிபதி கோட்டாபய, கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக, தாம் பதவி விலகுவதற்கு முன் வெளிநாடு செல்ல விரும்பியதாக நம்பப்படுகிறது.

எனினும் குடிவரவு-குடியகல்வு அதிகாரிகள் அவரது கடவுச்சீட்டை முத்திரையிட மறுத்துவிட்டனர்.

இதேவேளை, முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவும் நேற்று அதிகாலை குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளால் தடுக்கப்பட்ட நிலையில் மீண்டும் திரும்பிச் சென்றுள்ளார்.

இதனையடுத்து மத்தள மஹிந்த ராஜபக்ஷ விமான நிலைய குடிவரவு-குடியகல்வு அதிகாரிகளும் தமது கடமைகளில் இருந்து விலகியுள்ளனர்.

இதேவேளை, கோட்டாபய மற்றும் பஸில் ஆகியோருக்கு விமான நிலையங்களின் ஊடாக தப்பிச்செல்லமுடியாத நிலையில், கடற்படைக் கப்பல் மூலம் இந்தியா அல்லது மாலைதீவுக்கு செல்வதே தற்போதுள்ள வழியாகும் என்று பாதுகாப்பு தரப்பை கோடிட்டு செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்கு சொந்தமாக யு.எல். 225 விமானத்தில் டுபாய் செல்வதற்காக அதிமுக்கிய பிரமுகர்கள் பிரிவில் பயணிக்க முற்பட்டபோது தடுக்கப்பட்டதாகவும், எமிரேட்ஸ் விமானத்துக்காக கட்டுநாயக்கா விமானப்படைத் தளத்தில் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சுமுகமான...

இந்த நிலையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை தொடர்ந்தும் செயலாளர் நாயகம், உன்னிப்பாக அவதானித்து வருகின்றார் என்று ஐக்கிய நாடுகளின் செயலாளர் அன்ரனியோ குட்டரெஸ் சார்பாக, பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

செயலாளர், இலங்கை மக்களுடன் இணைந்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்தின் சுமுகமான அதிகார மாற்றத்தை உறுதி செய்வதற்கும் பொருளாதார நெருக்கடிக்கு நிலையான தீர்வுகளைக் காண்பதற்கும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுமாறு அனைத்து தரப்பினருக்கும் அவர் அழைப்பு விடுப்பதாக ஹக் தெரிவித்துள்ளார்.

அனைத்து வன்முறைச் செயல்களையும் பொதுச்செயலாளர் கண்டிக்கிறார்.

அத்துடன் அமைதியைப் பேணுவதற்கு பொறுப்பானவர்கள் பொறுப்புக் கூறப்பட வேண்டும் என்றும் செயலாளர் அழைப்பு விடுக்கிறார் என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் ஆதரவளிக்க ஐக்கிய நாடுகள் சபை தயாராக உள்ளது என்றும் பர்ஹான் ஹக் குறிப்பிட்டுள்ளார். (அ)

## ஜனாதிபதியுடன்...

னைகளுக்கு தீர்வு காணவேண்டும். இந்த இடைக்கால அரசாங்கம் ஒரு வருடத்துக்கு மட்டுமே ஆட்சியில் இருக்க முடியும்.

மக்களின் குறுங்கால அடிப்படை பிரச்னைகளுக்கு 6 மாதங்களுக்குள் தீர்வு காணப்பட வேண்டும். அத்துடன் ராஜபக்ஷவினர் அல்லது ராஜபக்ஷவினரை பாதுகாக்க முனைவோருக்கு மீண்டும் பதவிகள் வழங்கப்படக்கூடாது.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசாங்கம் உடனடியாகப் பதவி விலகி இடைக்கால அரசாங்கத்துக்கு வழிவிட வேண்டும். போராட்டங்களின் போது கைதானவர்கள் உள்ளிட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட வேண்டும் என்பன போன்ற நிபந்தனைகளை அவர்கள் விதித்துள்ளனர். (ஐ)

## 13ஆம் திருத்த...

கருத்தை முன்வைத்தார்.

அவருக்கு பதிலளித்த பிரதமர் ரணில், "அரசமைப்பின் அடிப்படையில் விடயங்களை முன்னகர்த்தி நாட்டுக்கு வளமான எதிர்காலத்தை உருவாக்குவதே தன்னுடைய எதிர்பார்ப்பு" என்று பிரதமர் கூறினார் என அவரின் ஊடகப்பிரிவு தகவல் வெளியிட்டது. (ஐ)

## ஸ்டாலினுக்கு...

கொண்டுள்ளேன்", என்று அவர் நேற்று மாலை தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

அத்துடன், "அனைவரும் முகக்கவசம் அணிவதோடு, தடுப்பூசிகளைச் செலுத்திக் கொண்டு, பாதுகாப்பாக இருப்போம்", என்றும் கூறியுள்ளார். (ஐ)

## நாட்டை...

நிலை ஏற்பட்டுள்ளது.

இதன்போது குடிவரவு அதிகாரிகள், தமது கடமைகளை புறக்கணித்தமையை அடுத்து, பஸில் ராஜபக்ஷ மீண்டும் நாட்டுக்குள் திரும்பிவிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கடல் வழி வெளியேற கோட்டாபய திட்டம்?

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி பதவியிலிருந்து இன்றைய தினம் விலகும் கோட்டாபய ராஜபக்ஷ கடல் வழியாக நாட்டை விட்டு வெளியேற திட்டமிட்டுள்ளார் என்று ஏ. எவ். பி. செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தில் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளுடன் ஏற்பட்ட அவமானத்துக்குப் பின்னரே கோட்டாபய ராஜபக்ஷ இந்த முடிவுக்கு வந்துள்ளார் என்று கூறப்படுகின்றது. கடந்த சனிக்கிழமை ஜனாதிபதி மாளிகை முற்றுகையிடப்பட்டபோது, அங்கிருந்து ராஜபக்ஷக்கள் தப்பியோடினர்.

இந்நிலையில், பதவியிலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ விலகும் இராஜிநாமா கடிதம் ஏற்கப்படும்வரை அவரின் பதவி செல்லுபடியாகும். முப்படை தளபதி பதவிக்கான அதிகாரமும் அவரிடமே இருக்கும். இதனால், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி கடற்படையின் படகு அல்லது கப்பல் மூலமாக நாட்டை விட்டு வெளியேறுவது குறித்து கோட்டாபயவின் நெருங்கிய சகாக்கள் ஆலோசித்து வருகின்றனர்.

கடல் வழியாக வெளியேறுவதே தற்போது சிறந்த தெரிவாக உள்ளது என்பதுடன், கோட்டாபய ராஜபக்ஷ மாலைதீவுக்கு அல்லது இந்தியாவுக்கு செல்லலாம் அல்லது விமானம் மூலம் துபாய்க்கு என்றும் கூறப்படுகின்றது.

# ஜனாதிபதியை தடுக்கும் அதிகாரம் குடிவரவு அதிகாரிகளுக்கு இல்லை!

கொழும்பு, ஜூலை 13

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேற குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் அனுமதிக்கவில்லை என்ற தகவலை குடிவரவு - குடியகல்வு அதிகாரிகள் சங்கம் மறுத்துள்ளது.

பதவியில் இருக்கும் ஜனாதிபதியை அவரின் உத்தியோகபூர்வ அந்தஸ்தின் அடிப்படையில் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுக்க குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளுக்கு சட்டபூர்வமான அதிகாரம் இல்லை என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது.

# உலக பணவீக்க பட்டியலில் இலங்கை மூன்றாவது இடம்!

கொழும்பு, ஜூலை 13

ஜோன் ஹொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர், பொருளாதார நிபுணர் ஸ்டீவ் ஹொங்கின் பணவீக்கச் சுட்டெண்ணுக்கமைய, இலங்கை ஒரு இடம் பின் நகர்ந்துள்ளது.

ஸ்டீவ் ஹொங்கின் பணவீக்க விளக்கப்படம் உலகின் பல நாடுகளால், தங்கள் பொருளாதார நிலைமைகளை பகுப்பாய்வு செய்ய பயன்படுத்தப்படும் ஒரு அளவுகோலாகும்.

இந்தக் குறியீடு மாதந்தோறும் புதுப்பிக்கப்படும்.

இதுவரை புள்ளிப்பட்டியலில் இலங்கை இரண்டாவது இடத்திலும், ஸிம்பாப்வே முதல் இடத்திலும் இருந்தது.

ஸ்டீவ் ஹொங்கின் சமீபத்திய குறியீட்டின் படி, துருக்கி இரண்டாவது இடத்தை எட்டியுள்ளது. (அ)

# ரூபவாகினி, ஐ. ரி. என்னுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு!

கொழும்பு, ஜூலை 13

ரூபவாகினி, ஐ. ரி. என். ஆகிய அரச தொலைக்காட்சி நிலையங்களின் பாதுகாப்புக்கு பல நூறு இராணுவம் மற்றும் விமானப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலைத் தொடர்ந்து மக்களுக்கான அறிக்கை ஒன்றை வெளியிட போராட்டக் குழுவினர் திட்டமிட்டுள்ளனர். இதனை நேரடி ஒளிபரப்பு செய்யுமாறு ரூபவாகினி, ஐ. ரி. என். அரச தொலைக்காட்சிகளை அவர்கள் கேட்டுள்ளனர்.

அவர்களின் இந்தக் கோரிக்கைக்கு இரு நிர்வாகங்களும் மறுப்புத் தெரிவித்துவிட்டன.

இந்நிலையிலேயே அவற்றின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நூற்றுக்கணக்கான படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## கோட்டாபய...

களும் பாதுகாப்பாக நாட்டை விட்டு வெளியேற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்தே இந்தத் தாமதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேற முடியாத நிலையில் உள்ளார். இதேசமயம், அவர் தனது சிறப்புரிமைகளை பயன்படுத்த முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இதனால், தனதும், நெருங்கிய உறவினர்களினதும் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு கோட்டாபய ராஜபக்ஷ தனது பதவி விலகலை பிற்போடத் தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு பதவி விலகலைப் பிற்போடுவதன் மூலம் முப்படை தளபதி என்ற கோதாவில் அவர் அதிகாரங்களைப் பயன்படுத்தி விமானப் படை, கடற்படையின் வளங்களைப் பயன்படுத்தி உறவினர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதுடன், தானும் பாதுகாப்பாக வெளியேறவும் முடியும்.

இந்நிலையிலேயே, அவரின் பதவி விலகல் தாமதமாகும் என்று அவருக்கு நெருக்கமான பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## பாண் விலை...

பொருட்களின் விலை 10 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இவ்வாறு விலை அதிகரிக்கப்பட் டுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu


# பெரமுனவின் தலைவர்கள் எவரும் நாட்டிலிருந்து வெளியேறவில்லை

கொழும்பு, ஜூலை 13

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த ஒரு தலைவரும் நாட்டை விட்டு வெளியேறவில்லை என அக்கட்சி அறிக்கை ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய தலைவர்கள் கடந்த 9ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியதாக சமூக ஊடகங்களில் பரவி வரும் காணொளிகளில் உண்மையில்லை என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மேலும் கூறியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தேசிய அமைப்பாளர் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் கட்சியின் உயர்பீடத் தலைவர்கள் தொடர்ந்தும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டிலேயே தங்கியுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று நடைபெற்றது இதில், பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

# எரிவாயு வரிசையில் காத்திருந்தவர் மரணம்

கொழும்பு, ஜூலை 13

கொட்டாவ பஸ் நிலையத்திற்கு அருகில் எரிவாயு வரிசையில் காத்திருந்த நபர் ஒருவர் திடீர் உடல் நலக் குறைவு காரணமாக ஹோமாகம ஆதார வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக கொட்டாவ பொலிஸார் தெரிவித்தனர்.

கொட்டாவ பகுதியைச் சேர்ந்த ஜயதிஸ்ஸ பெரேரா என்ற மின் பொறியியலாளரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவர் நேற்றுக் காலை கொட்டாவ நகரின் மத்தியில் அமைந்துள்ள பிரதான பஸ் நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள லிட்ரோ எரிவாயு விநியோக நிலையத்திற்கு தனது மகனுடன் சென்றதாக கூறப்படுகிறது.

அதற்காக ஏராளமானோர் வந்து வரிசையில் காத்திருந்தனர், உயிரிழந்த நபரும் காரில் வந்து எரிவாயு சிலிண்டர் வாங்கும் எண்ணத்தில் அங்கு காத்திருந்தார்.

சுகவீனமுற்ற நபர் சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ஜூன் மாதத்தில் 27,937 பேர் வெளிநாடு சென்றுள்ளனர்

கொழும்பு, ஜூலை 13

இவ்வருடம் ஜூன் மாதத்தில் 27,937 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 18,083 பேர் தாங்களாகவே வேலை வாய்ப்புகளை தேடிக்கொண்டதாகவும், 9,854 நபர்கள் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் மூலம் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஜனவரி மற்றும் ஜூலை முதல் வாரத்திற்கு இடையில், 156,179 பேர் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சென்றுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களில் 100,767 பேர் சொந்த வழிகளிலும் 55,411 பேர் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் மூலம் நாட்டை விட்டு வெளியேறினர்.

மேலும் குவைத்திற்கு 39,216 பேர், கட்டாருக்கு 36,022 பேர், சவுதி அரேபியாவுக்கு 26,098 பேர், தென் கொரியாவுக்கு 3,219 பேர், ஜப்பானுக்கு 2,576 பேர் வேலைக்காகச் சென்றுள்ளனர். (அ)

# 38 கிலோ ஹெரோயினுடன் தாயும் மகனும் சிக்கினர்!

கொழும்பு, ஜூலை. 13

எம்பிலிப்பிட்டிய பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் பெண்ணொருவர் உட்பட 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

39 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் 46 வயதுடைய பெண்ணொருவரும் 22 வயதுடைய அவரது மகனுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

எம்பிலிப்பிட்டிய பகுதியில் உள்ள வீடொன்றில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதே இவ்வாறு கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# விமானப்படைத் தளபதியின் இல்லத்தில் கோட்டா இல்லை

கொழும்பு, ஜூலை 13

விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரனவுக்கு சொந்தமான வீட்டில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தங்கியிருப்பதாக முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் சமூக ஊடகங்களில் வெளியிட்ட ஒலிப்பதிவில் எவ்வித உண்மையும் இல்லை என விமானப்படை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக விளக்கமளித்து விமானப்படை நேற்று செவ்வாய்க்கிழமை அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இது விமானப்படை மற்றும் விமானப்படைத் தளபதியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் மக்கள் மத்தியில் வெறுப்பையும் கோபத்தையும் பரப்பும் குறுகிய சந்தர்ப்பவாத நோக்கத்தை அடைவதற்காகவும் வெளியிடப்பட்ட செய்தி என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)







# சர்வகட்சி அரசில் ஜே.வி.பி. இல்லாவிடின் மீண்டும் அதே போராட்டங்கள் வெடிக்கும்

## எச்சரிக்கின்றார் தயாசிறி ஜயசேகர

கொழும்பு, ஜூலை 13

சர்வகட்சி அரசாங்கத்தில் ஜே.வி.பி.யையும் இணைத்துக் கொள்ளவேண்டும் என்றும் இல்லையேல் மீண்டும் அதே போராட்டங்களை எதிர்கொள்ள நேரிடும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலையடுத்து, ஜனாதிபதி பதவிக்கு பல பெயர்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் தயாசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்கனவே தனது பெயரை அறிவித்துள்ளார். ஏனைய குழுக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவை நியமிக்கத் திட்டமிட்டுள்ளன.

எனவே இந்த சூழ்நிலையில் அவர்களில் ஒருவர் பாராளுமன்ற வாக்கெடுப்பில் தேர்ந்தெடுக்கப்படுவார். ஆனால் இந்த வேட்பாளர்களில் யாரேனும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கு 'கோட்டா கோ கம' செயற்பாட்டாளர்களின் ஆதரவைப் பெற முடியுமா என்பது உறுதியாகத் தெரியவில்லை.

அவ்வாறு இரு வேட்பாளர்களையும் அவர்கள் நிராகரிக்கும் பட்சத்தில் அடுத்த விருப்பத்தை ஆராய வேண்டும்.

அதன்படி, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன குறுகிய காலத்திற்கு பதில் ஜனாதிபதியாக பதவியேற்று நாட்டை நிர்வகிப்பதற்காக பிரதமரை நியமிப்பதே அடுத்த தெரிவாகும்-என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**

*6.00 மணி : பக்திப்பாடல்கள்*
*6.30 மணி : வணக்கம் டான்*
*6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்*
*6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்*
*6.55 மணி : இன்றையராசி பலன்*
*7.05 மணி : உளநலம்-காசி ஜீவலிங்கம் (யாழ்பாவாணன்)*



*7.15 மணி : கதை வழி அறமொழி*
*7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்*



*7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்*
*8.30 மணி : காலை செய்திகள்*
*9.00 மணி : கலாட்டா காலை-நேரலை*
*10.30 மணி : தொடர்நாடகம்*
*11.00 மணி : கலக்கல் ஸ்ரார் (மறு ஒளிபரப்பு)*

**பகல்**

*12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை*



*1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )*
*1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- சாருலதா,விஸ்வரூபம்-02 திரைப்படங்களின் காட்சிகள்*
*4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர் நேரலை நிகழ்ச்சி*
*5.30 மணி : குறுந்திரை நேரம்*
*6.00 மணி : டொப் 10 மூவீஸ்-புதிய 10 திரைப்படங்களின் தரவரிசை*

**இரவு**

*07.00 மணி : பாரதீ*



*08.00 மணி : இரவுச் செய்திகள்*
*9.00 மணி : துறைக்கு அப்பால்*
*09.30 மணி: பத்துக்கு 10*
*10.00 மணி : நேருக்கு நேர்*

**காலை**

*6.00 மணி : சிரி சிரி சிரி*
*8.00 மணி : சிரிப்பு சரடிவெடி*
*10.00 மணி : ஒரு பட கொமடி*
*11.00 மணி : சிரிப்போ சிரிப்பு*

**பகல்**

*1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்*
*3.00 மணி : குண்டக்க மண்டக்க*
*5.00 மணி : ஒரு பட கொமடி*
*6.00 மணி : கொமடி கலாட்டா*

**இரவு**

*8.00 மணி : ஒரு படக்கொமடி*
*9.00 மணி : சிரிப்போ சிரிப்பு*
*10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்*

**காலை**

*6.00 மணி : பனிப்பூக்கள்*
*7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்*
*8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்*
*9.00 மணி : மெல்லிசை*
*10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)*

**பகல்**

*12.00 மணி : ராஜா ராணி*
*1.00 மணி : விசை இசை*
*3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)*
*4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)*
*5.00 மணி : இனிது இனிது*
*6.00 மணி : என்றென்றும் இசை*
*7.00 மணி : ஓய்வெடு நிலவே*

**இரவு**

*8.00 மணி : காற்றில் வரும் கீதம்*
*9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்*

**காலை**

*5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*6.00 மணி : தரம் 07 - தமிழ்*
*6.45 மணி : தரம் 08 - தமிழ்*
*7.30 மணி : தரம் 09 - கணிதம்*
*8.15 மணி : தரம் 10 - கணிதம்*
*9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்*
*10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி*
*11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்*

**பகல்**

*12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்*
*1.00 மணி : தரம் 07 - தமிழ்*
*2.00 மணி : தரம் 08 - தமிழ்*
*3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்*
*3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்*
*5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்*
*5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்*
*6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

**இரவு**

*7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்*

**காலை**

*5.00மணி : சிவாய மந்திரம்*
*6.00 மணி : சுப்ரபாதம்*
*6.30 மணி : சுப்ரபாதம்*
*7.00 மணி : இன்றைய சிந்தனை*
*7.05 மணி : இன்றைய நாள்*
*7.20 மணி : ஈழத்து சித்தர்கள்*
*7.30 மணி : மங்கள இசை*
*8.00 மணி : அருளுரை*
*8.30 மணி : திருவாசகம்*
*9.00 மணி : திருவிழா-01*
*10.00 மணி : பஜனை*
*10.30 மணி : தமிழககோவில் திருவிழா*
*11.00 மணி : பக்திமலர்*

**பகல்**

*12.00 மணி : திரையில் பக்தி*
*12.30 மணி : திருவிழா-02*
*6.00 மணி : கந்தசஷ்டி கவசம்*

**இரவு**

*7.00 மணி : செய்திகள்*
*7.30 மணி : அருளுரை*
*8.00 மணி : திருவிழா-01*

**காலை**

*7.00 மணி : நாளொரு நற்சிந்தனை*
*7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்*
*8.00 மணி : ஜெபமாலை*
*9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)*
*10.00 மணி: அன்னை மரியா*
*10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)*
*11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)*

**பகல்**

*12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)*
*02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)*
*03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)*
*04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)*
*05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)*
*06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)*
*07.00 மணி : ஞானவழி*
*07.30 மணி : அன்பியம்*

**காலை**

*6.00 மணி : கிராத்*
*7.00 மணி : இறை சிந்தனை*
*7.30 மணி : இஸ்லாமிய பாடல்*
*8.00 மணி : கலந்துரையாடல்*
*9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்*
*10.00 மணி : மனதோடு பேசலாம்*
*10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்*
*11.00 மணி : சுவனப்பாதை*
*11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்*

**பகல்**

*12.00 மணி : லுகர் அதான்*
*12.30 மணி : இஸ்லாமிய வரலாறு*
*1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்*
*2.00 மணி : கஸீதா*
*2.30 மணி : இறை சிந்தனை*
*3.00 மணி : பாடல்கள்*
*3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்*
*4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்*
*5.00 மணி : இறை தென்றல்*
*6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்*

**இரவு**

*7.00 மணி : பிறை பிரசங்கம்*
*8.00 மணி : இஸ்லாமிய வரலாறு*